Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு+II
விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி- 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 றஜப் 19 (25.08.2005) வியாழக்கிழமை இதழ்:326

அசல் 22 கரட் தங்கத்தில்
நவீன காலத்திற்கேற்ப
புதிய டிசைன்களில்
தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்
சிறி கருமாரி நகையகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
205/6, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டிடம்,
யாழ்ப்பாணம். தொ:பே: 222 5385.

## கொழும்பு நகர தளபதி திடீரென இடமாற்றம்!

### பாதுகாப்பு பலவீனப்படுமென அச்சம்

கொழும்பு—

கொழும்பு பிராந்தியத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தளபதியாக அண்மையில் நியமிக்கப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தன திடீரென அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இதையடுத்து கொழும்பு பிராந்திய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தளபதியாக மேஜர் ஜெனரல் பி.சந்திரவன்ச நேற்றுமுன்தினம் முதல் நியமிக்கப்பட்டார்.

இராணுவத் தளபதி ஜெனரல் சாந்த கொட்டேகொடவினால் திடீரென மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த இடமாற்றம் தொடர்பாக இராணுவ அதிகாரிகள் மத்தியில் அதிருப்தி தோன்றியிருப்பதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

அண்மையில் கொழும்பு கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தன

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - படைத்தரப்புடன் நேற்று ஹொக்லண்ட் வவுனியாவில் பேச்சு!

கொழும்பு—

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.50 மணிவரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகள் தரப்பில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம், வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை, நிர்வாகப் பொறுப்பாளர் மலரவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தரப்பில் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட், வவுனியா மாவட்ட போர் நிறுத்தக் குழுப் பொறுப்பதிகாரியுடன் மேலும் இருவர் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் தாக்கப்படுவது சம்பந்தமாகவும், அந்தப் பிரதேசத்தில் ஏனைய ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் குறித்தும், ஓமந்தை சோதனைச் சாவடிக்கு ஒரு கிலோமீற்றர் தூரத்தில் புதிய சோதனைச் சாவடி அமைத்தது குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# ஒஸ்லோவில் புலிகளுடன் பேசும் யோசனையை அரசு நிராகரிப்பு!

## இனி வெளிநாடுகளில் பேச்சு நடக்காதாம்

கொழும்பு —

விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடத்தும் திட்டத்தை இலங்கை அரசு நிராகரித்திருப்பதுடன் - எந்தவொரு வெளிநாட்டிலும் புலிகளுடன் பேசத்தயார் இல்லை என்று அறிவித்துள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் நடைமுறையை மீளாய்வு செய்து இரு பகுதியினரும் அதனை முழுமையாக கடைப்பிடிப்பதற்கு ஏதுவான வழிமுறைகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்ட பேச்சுக்களுக்கு முன்வருமாறு நோர்வே விடுத்த அழைப்பை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் ஏற்றுக்கொண்டு அரசதரப்புடன் பேச்சு நடத்துவதற்கு கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகளின் தலைமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உளவு பார்த்ததாகக் கூறி 7 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு —


கண்டி எசல பெரஹரா இடம்பெற்ற காலப்பகுதியில் உளவு பார்த்தார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஏழு தமிழ் இளைஞர்களை கண்டி பொலிஸார் கைதுசெய்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், அச்சுவேலி, கரவெட்டி, மல்லாவி, திருக்கோவில், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் ஒருவர் விடுதலைப்புலிகளுக்காக உளவு பார்த்து வருபவரெனவும் கண்டிப்பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்தவத்தையின் மகியாவை வீட்டை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெளியுறவு அமைச்சர் அனுரா இன்று இந்தியா செல்கிறார்!



கொழும்பு —

வெளியுறவு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க இன்று இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலைசெய்யப்பட்ட பின்னர், கடந்த திங்கட்கிழமை அனுராபண்டார நாயக்கவை புதிய வெளிவிவகார அமைச்சராக ஜனாதிபதி சந்திரிகா நியமித்தார்.

இதன்பின்னர் அனுரா பண்டாரநாயக்க தனது முதல் வெளிநாட்டுப்பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்ளவிருக்கிறார்.

இரண்டு நாள் விஜயமாக புதுடெல்கிக்கு செல்லும் அனுரா பண்டார நாயக்க -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளர் பதவி விலகுவாரா?

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடமே நடத்த வேண்டுமென்ற தனது அறிவிப்புக்கு மாறாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்குமானால், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்யவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா இரண்டாம் தடவையாக 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியை ஏற்பதாக சத்தியப்பிரமாணம் செய்த காலத்தின் படி,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான ஊடகவியலாளர் நேற்று பிணையில் விடுவிப்பு

கொழும்பு —

கொழும்பு - கோட்டே ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தைப் படம் பிடித்தபோது ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டு - பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சுடர் ஒளி செய்தியாளர் பிரேமச்சந்திரன் யதுர்சன் கோட்டே நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பு - கோட்டே நீதிமன்ற நீதிபதி சரத் கருணாரட்ன முன்னிலையில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்ட யதுர்சனை பிணையில் விடுவிப்பதற்குத் தமக்கு ஆட்சேபனை இல்லையென்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் கோட்டே ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக வளங்கள் நிலையத்தின் முன் இன்று முதல் தொடர்ச்சியான மறியல்!

யாழ்ப்பாணம் —

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் பத்திரிகை கழகம் அமைப்பது தொடர்பாக அனுப்பிய கடிதத்திற்கு தீர்க்கமான பதிலேதும் வழங்கப்படாமையால் - ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் பணிகளை முடக்கும் வகையில் இன்று ஊடகவியலாளர்கள் மறியல் போராட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் பத்திரிகைக் கழகம் ஒன்று அமைப்பது தொடர்பாக வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக பதிலேதும் நேற்று மாலை வரை வழங்கப்படவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 4 பிரிகேடியர்களுக்கு பதவி உயர்வு!

கொழும்பு —

இராணுவத்தைச் சேர்ந்த நான்கு பிரிகேடியர் தர அதிகாரிகளுக்கு மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்வு வழங்கப்படிருப்பதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பிரிகேடியர் சரத் கருணாரட்ண, பிரிகேடியர் பராக்கிரம பன்னிப்பிட்டிய, பிரிகேடியர் பி.சந்துரவன்ச, பிரிகேடியர் திஸ்ஸ ஜெயவர்த்தன ஆகிய அதிகாரிகளே மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## தமிழ்க்குழுக்களின் தொடர்பை இடைநிறுத்தி வைக்குமாறு புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவு

கொழும்பு —

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆயுதக் குழுக்களுடனான சகல தொடர்புகளையும் உடனடியாக இடைநிறுத்துமாறு - இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு இராணுவ புலனாய்வுப் பணிப்பாளர் பிரிகேடியர் றிஸ்வி ஷகி உத்தரவிட்டிருப்பதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), கருணா குழு, புளொட் போன்ற ஆயுதக் குழுக்களுடனான தொடர்புகளையே இடைநிறுத்துமாறு இவர் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்
எமது சேவைகள் 1. ஈ.சீ.ஜி 2. அவசர முதலுதவி சிகிச்சைப் பிரிவு 3. வாட் 4. போக்குவரத்துச்சேவை [நோயாளிகளுக்கு]
(C/4385) 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 8144
ஆலோசனை நேரம்:
(திங்கள் - சனி) காலை 6.00- இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 - காலை 10.00
மாலை 5.00 - இரவு 9.00



# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு 2007 முதல் ஐந்து கட்டாய பாடங்கள்

## கல்வி அமைச்சின் ஆலோசகர் தெரிவிப்பு

கொழும்பு

க.பொ.த சாதாரண தரத்தில் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களில் 2007 ஆம் ஆண்டு முதல் புதிய நடை முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் ஆலோசகர் ஆர்.எஸ்.மெதகம தெரிவித்தார்.

இதன்படி நவீன கல்விச் சீர்திருத்த முறையின்கீழ் க.பொ.த சாதாரண தரத்தில் மாணவர்கள் 10 பாடங்களில் தோற்ற வேண்டும். இதில் 05 பாடங்கள் கட்டாய பாடங்களாக்கப்பட்டுள்ளன. கணிதம், ஆங்கிலம், சமயம், வரலாறு, தமிழ் அல்லது சிங்கள மொழி ஆகியன கட்டாய பாடங்களாகவும்-

ஏனைய 05 பாடங்களும் விருப்பத்துக்குரிய பாடங்களாகவும் ஆக்கப்பட்டுள்ளன. இந்த விருப்பத்துக்குரிய பாடங்களை மாணவர்கள் மூன்று பிரிவுகளில் இருந்து தெரிவு செய்தல் வேண்டும். முதல் பிரிவில் சித்திரம், சங்கீதம், நடனம், வாத்தியங்கள் இசைத்தல் போன்ற கலையுடன் சம்பந்தமான பாடங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவில் இருந்து ஒரு பாடத்தை மாணவர்கள் தெரிவு செய்தல் வேண்டும்.

இரண்டாம் பிரிவில் தகவல் தொழில்நுட்பம், விவசாயம், வியாபாரத்தொழில் நுட்பம், மீன்பிடியியல், வடிவமைப்புத் தொழில்நுட்பம், தொல் பொருளியல், ஆவணங்களை கணினிமயப்படுத்துதல், சுகாதாரக் கல்வி, ஊடக தொலைத்தொடர்பு, கைத்தொழில் மற்றும் உற்பத்தி ஆகிய தொழில் நுட்பம் சார்ந்த 12 பாடங்களில் ஒன்றை தமது விருப்பத்திற்குரிய பாடமாக மாணவர்கள் தெரிவு செய்தல் வேண்டும்.

மூன்றாம் பிரிவில் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல், புவியியல் ஆகியவற்றுடன் பாளி, சமஸ்கிருதம், ஹிந்தி, ஜப்பான், அரபு, ஜேர்மன் ஆகிய மொழிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் பிரிவில் மாணவர்கள் விருப்பத்துக்குரிய பாடமாக 03 பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்

இந்தப் புதிய நடைமுறை தொடர்பாக கல்வி அமைச்சின் ஆலோசகர் கருத்து தெரிவிக்கையில் -

விருப்புக்குரிய பாடங்களை மாணவர்கள் தாமே தெரிவு செய்தல் வேண்டும். இதன் வாயிலாக சகல மாணவர்களின் தரத்தையும் ஒரே மட்டத்தில் வைத்து நோக்கமுடியும். 2007 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த நடைமுறை பற்றி ஆண்டு -06 தொடக்கம் 09 வரை கல்வி கற்கும் மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலைகள் தோறும் விளக்கமளிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 ஓவர் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக் கழக ஏ அணி மோதவுள்ளது.

# நல்லைக் குமரன் மலர் 29 ஆம் திகதி வெளியீடு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவின் வெளியீடான நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சைவசமய விவகாரக்குழுத் தலைவர் க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை சைவசமய விவகாரக் குழு செயலாளர் இ.இரட்ணசிங்கம் நிகழ்த்த, ஆசியுரையை நல்லை ஆதின முதல்வர் நிகழ்த்துவார். மலர் வெளியீட்டுரையை ந.விஜயசுந்தரம் நிகழ்த்த ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் நிகழ்த்துவார்.

நூலின் முதற்பிரதியை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

# மாமுனை கிராம மக்களுக்கு முப்பது படகுகள் அன்பளிப்பு!

வடமராட்சி

புலம் பெயர்வாழ் தமிழ் உறவுகளின் ஆதரவுடன் வடமராட்சி கிழக்கு மாமுனைக் கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடற்தொழில் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் மாமுனை பொதுமண்டபத்தில் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை மனிதநேய நம்பிக்கை நிதியத்தைச் சேர்ந்த திருமதி.வீ.கைலாயபிள்ளை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையைச் சேர்ந்த தாயகன் ஏற்றிவைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், கடற்தொழிலாளர் சமாச சம்மேளன மேலாளர் வ.மோகன், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் நிலவன்,அமெரிக்க கணினி பொறியியலாளர் நித்தியானந்தன் இன்பச்செல்வன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

புலம் பெயர் வாழ் தமிழ் உறவுகளின் நிதி உதவியுடன் வழங்கப்பட்ட 30 படகுத் தொகுதிகளையும் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கு வழங்குவதற்குரிய சகல ஒழுங்குகளையும் மனித நேய நம்பிக்கை நிதியத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதிகள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பெருந் தொகையானோர் கலந்து கொண்டனர். (21)

# மீனவரின் கடலுணவுப் பொருட்கள் சந்தைப்படுத்த வசதிகள் செய்யப்படும்!

## கடற்தொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர்

நெடுந்தீவு

நெடுந்தீவு பிரதேச மீனவர்கள் பிடிக்கும் கடலுணவுப் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவிகளை பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என - கடற் தொழில் நீரியல்வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச கடற்தொழிலாளர்கள் தாம் அன்றாடம் பிடிக்கும் கடலுணவு (மீன், இறால், நண்டு) பொருட்களை நல்ல விலைக்கு விற்பதற்குரிய சந்தைவாய்ப்புக்கள் வசதிகள் இல்லாமையால் மிகவும் குறைந்த விலையிலேயே உள்ளூர் வியாபாரிகளுக்கு விற்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

இது சம்பந்தமாக நெடுந்தீவு பிரதேச கடற்தொழிலாளர்கள், கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு தமது தேவைகள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சுனாமி அனர்த்த கடற்தொழில் குழுக் கூட்டத்தில் நெடுந்தீவு பிரதேச கடற்தொழிலாளர்களின் சந்தை வாய்ப்பு பிரச்சினை முன்வைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான குளிரூட்டி அறை, நெடுந்தீவு - புங்குடுதீவு குறிகாட்டுவான் வரை கடலுணவுகளைக் கொண்டு செல்ல உள்ளிணைப்பு இயந்திரம் பூட்டிய படகு ஆகியவற்றை அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்றுத் தந்துதவ நடவடிக்கை எடுப்பதாக கடற்தொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார். (21)

# நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் பொதுச்சேவை ஆணைக்குழு நிராகரிப்பு

ஆழியவளை

அரசாங்கப் பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமைபுரிவோர்ரை நிரந்தரமாக்குவது தொடர்பான கல்வி அமைச்சின் கோரிக்கையை பொதுச்சேவை ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

இவர்களுக்கு போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்துவதன் மூலமே நிரந்தர நியமனத்தை வழங்கமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிபர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளில் கல்வி அமைச்சு ஈடுபட்டு வருகிறது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரும் என கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது சேவையிலுள்ள தரம் 3, தரம் 2 அதிபர்களுக்கு இலங்கை அதிபர் சேவையில் 2 II, 2 I ஆகிய தரங்களுக்கு பதவி உயர்வு வழங்கிய பின்னர் ஏற்படும் தரம் 3 அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சையே விரைவில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு இலங்கை ஆசியர் சேவை வகுப்பு 2 ஐச் சேர்ந்த ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (122)

## இடம்பெயர்ந்த மக்களுக்கான

# ஏப்ரல், மே மாத நிவாரணம் 1 ஆம் திகதி வழங்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு ஏப்ரல், மே மாதங்களுக்கான இலவச உலருணவுகளை அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு ஏற்ற வகையில் யாழ். மாவட்ட ப.நோ.கூ.சங்கங்கள் மேற்படி மாதங்களுக்குரிய வழங்கற் கட்டளைகளை யாழ்.மாவட்டச் செயலக புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் நாளையும், நாளை மறுதினமும் பெற்று, முதலாம் திகதி ஒரே தடவையில் மேற்படி இரு மாதங்களுக்குமான விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

## மூளாய் வைத்தியசாலையில்

# முதல் பிறந்த குழந்தைக்கு இலவச மகப்பேற்று சிகிச்சை

சங்கானை

மகப்பேற்று சிகிச்சைக்கு பேர் பெற்று விளங்கிய மூளாய் வைத்திய சாலை கடந்த 15 வருடங்களாக இயங்க முடியாமல் இருந்து வந்துள்ளது. தற்போது இங்கு 24 மணிநேர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை காரை நகரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் மகப்பேற்றுச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவருக்கு இலவசமாகவே சிகிச்சை வழங்கப்பட்டதாக வைத்திய சாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட காலத்திற்கு மகப்பேற்றுச் சிகிச்சைக்கான செலவுகளை இப்பகுதியைச் சேர்ந்த லண்டன் வாசியான ஒருவர் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டுள்ளார் எனவும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன், அண்மையில்3 மாத காலத்திற்கு இலவச நீரிழிவுச் சிகிச்சையை லண்டன் பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பித்துள்ளதாகவும், 350 நீரிழிவு நோயாளிகள் இனங்காணப்பட்டு பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (48)

# சின்னஞ் சிறு செய்திகள்

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்தல், செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு நீதிவான் நீதிமன்ற பதிவாளர் கேட்டுள்ளார்.

## சட்டமாணிப் பரீட்சை 5 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சட்டமாணிக் கற்கை நெறி முதலாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

## கார்த்திகைத் திருவிழா

நல்லூர் கந்தசுவாமி கோவில் 17 ஆவது உற்சவதினமான நாளை வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா இடம்பெறவுள்ளது.

இதில் வழமைபோன்றுஇந்த வருடமும் மாலை திருவிழாவின் போது உள்வீதியில் யாழ்.குடாநாட்டின் இசைக் கலைஞர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இசை அர்ச்சனை நடத்தவுள்ளனனர்.

இந்தக் கலைஞர்களுக்கான இசை ஒத்திகை நிகழ்வு மாலை வேளையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதினத்தில் நடைபெற்று வருகின்றது. (101)

## தங்கச் சிங்கம் விருதுபெற்ற ஈரானியத் தரைப்படம்

2000 ஆம் ஆண்டு வெனிஸ் திரைப்பட விழாவில் 'தங்கச் சிங்கம்' விருது பெற்ற 'த சேக்கிள்' (வட்டம்) என்னும் ஈரானியத் திரைப்படம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இலவசமாகக் காண்பிக்கப்படும்.

ஜஃவார் பனஹி இயற்றியுள்ள இந்தத்திரைப்படத்தையாழ். பல்கலைக் கழக திரைப்பட வட்டம் ஒழுங்கு செய்துள்ளது.

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றம் - தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை6.30 மணிக்கு குணபூஷணம் நாகராஜாவின் பாட்டு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - வயலின் - எ.ஜெயராமன், மிருதங்கம் - எஸ்.துரைராஜா, முகர்சிங் - கே.நந்தகுமார் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (100)

---

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சமய சொற்பொழிவு இன்று பிற்பகல் 6.30 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சித்தங்கேணி சிவன் கோவிலைச் சேர்ந்த சபா.வாசுதேவசர்மா இந்து வாழ்வியல் சடங்கு எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார்.

# நூற்றாண்டு நிறைவு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும்

சாவகச்சேரி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு பெருவிழா நாளை மாலை 4.30 மணிக்கு கல்லூரியின் சுப்பிரமணியம் திறந்தவெளி அரங்கில் கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.றெஜினா இருதயநாதன், பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் நூற்றாண்டு சிறப்பு மலரினை இதழ் ஆசிரியர் வெளியிட்டு வைக்க முன்னாள் அதிபர் ந.வெற்றிவேலு முதற்பிரதியை பெறுவார்.

நூற்றாண்டு - சிறப்பு மலர் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

## தமிழிசை அரங்கு

கிளிநொச்சி

கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியின் ஏற்பாட்டில் தென்னிந்தியாவிலிருந்து வருகைதந்திருக்கும் திருச்சி லோகநாதனின் மகன் ரி.மகாராஜனின் சிறப்பு தமிழிசை அரங்கு இன்று மாலை 4.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து தமிழிசை ஆர்வலர்களையும், கலை ஆர்வலர்களையும் பங்குகொள்ளுமாறு கிளிநொச்சி நுண் கலைக் கல்லூரி சமூகம் அழைப்பு விடுத்துள்ளது.

# ஊடகவியலாளர்களைத் தாக்கும் அதிகாரம் எவருக்கும் கிடையாது

## சுனந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு —

ஊடகவியலாளர்களைத் தாக்கும் அதிகாரம் ஜே.வி.பியினருக்கோ, பொது ஜன ஐக்கிய முன்னணியினருக்கோ அல்லது வேறு எவருக்குமோ கிடையாது என, சுதந்திர ஊடக அமைப்பின் தலைவர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும் பத்திரிகை பகுப்பாய்வு வழிகாட்டல் சம்பந்தமாக நேற்று முன்தினம் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வீரகேசரி பத்திரிகையில் குருநாகல் பிராந்திய நிருபர் கைது செய்யப்பட்டமை, தொடர்பாக பொலிஸார் இதுவரைக்கும் தெளிவான பதிலைத்தர மறுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற சுடர் ஒளி பத்திரிகை நிருபர் பலமாகத் தாக்கப்பட்டு, பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய தெளிவான விபரங்களைக் கூடத் தர மறுக்கும் பொலிஸாரின் செயற்பாடு எம்மை மிகுந்த விசனத்துக்குள்ளாக்கியுள்ளது.

இவ்வாறான ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்கள் பாதுகாப்புத் தொடர்பாக எழுந்துள்ள அச்சுறுத்தல்கள் குறித்து, பி.பி.சி போன்ற அனைத்துலக ஊடகங்களுக்கு வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவையனைத்தையும் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவற்றுக்கெதிராகச் சட்ட ரீதியாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்த எண்ணியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# காரைதீவில் கைதான நால்வரும் பிணையில் செல்ல அனுமதி!

அம்பாறை —

அம்பாறைமாவட்டத்திலுள்ள காரைதீவில் கடந்த 14ஆம் திகதி விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலி போராளி ஒருவர் உட்பட, நான்கு பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

காரைதீவைச் சேர்ந்த போராளி உதயமேனன் எனப்படும் பேரின்பம் சுதாகரன், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான வீமன் வரதன், கணபதிப்பிள்ளை புவேந்திரன், மற்றும் கோபால கிருஷ்ணன் ஜெயகாந்தன் ஆகியோர் கல்முனை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக இவர்களைச் சந்தேக நபர்களாக சம்மாந்துறை பொலிஸார் தமது நீதிமன்ற அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர்.

சந்தேக நபர்களை தலா 2000 ரூபா ரொக்கம் மற்றும் 50ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம் -அடுத்த மாதம் 27 ஆம் திகதி மீண்டும் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

# முக்கிய அரசியல் வாதிகளுக்கான பாதுகாப்பு மேலும் அதிகரிப்பு

கொழும்பு —

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரது கொலைக்குப் பின்னர், இலங்கையின் முக்கிய அரசியல்வாதிகளின் பாதுகாப்பு வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ள அதேநேரம், முக்கிய தலைவர்கள், மக்கள் முன்னால் தோன்றுவது பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை, கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற, பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையிலான முக்கிய கூட்டத்தில் கலந்து கொள்வதை தலைமை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தவிர்த்து விட்டார்.

இவ்வேளை, நேற்றுமுன் தினம் காலை கொழும்பு -07 இல் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தை வீடியோப்படம் எடுத்ததாகக் கூறி, வட பகுதியைச் சேர்ந்த தமிழர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு நகரின் அனைத்துப் பகுதிகளிலும் படையினர் குவிக்கப்பட்டு, சந்தேகத்தின் பேரில் நாள்தோறும் பெருமளவு தமிழர்கள் கைது செய்யப்பட்டு, தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் தேர்தல் நடைபெறலாமென எதிர்பார்க்கின்ற இந்த வேளையில், அரசியல்வாதிகள் மக்களைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எழுபது புலி உறுப்பினர்கள் கொழும்புக்குள் ஊடுருவலாம்!

## இராணுவ அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு —

புலிகளின் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த 70 பேர் தற்போது கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாக இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் தலைமைப்பீடத்தின் வழிகாட்டலில் கொழும்பினுள் ஊடுருவியுள்ள 70 புலிகளும் தெரிவு செய்யப்பட்ட அரசியல் இராணுவ முக்கியஸ்தர்களை இலக்குவைத்திருப்பதாகவும், இராணுவ அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

கொழும்புக்குள் ஊடுருவிய புலிகளைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் பெறப்படுகிறது.

புலிகளை வேட்டையாடுவதற்கு அவசரகாலச் சட்ட விதிகள் உதவியாக அமைந்துள்ளது என்றும், இராணுவப் புலனாய்வு அதிகாரி தெரிவித்ததாக அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

அதேவேளை, கொழும்பு நகரில் பெருமெடுப்பில் தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்து சிறையில் அடைக்கும் நோக்குடனேயே இவ்வாறான செய்திகள் சிங்கள ஊடகங்களில் வெளியிடப்படுவதாக தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

# கதிர்காமரைக் கொலை செய்வதற்கு மாற்றுத் திட்டம் தயாராக இருந்தது

## பொலிஸ் விசாரணையாளர்கள் தகவல்

கொழும்பு —

கொலையுண்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை அவரது இல்லத்திலுள்ள நீச்சல் தடாகத்துக்கு அருகில் வைத்துக் கொல்லும் திட்டம் தோல்வியில் முடிவடைந்தால், மற்றொரு தாக்குதலை நடத்துவதற்கு கொலையாளிகள் திட்டமிட்டிருந்தனர் என பொலிஸ் விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டாவது தாக்குதல் நாடாளுமன்றம் செல்லும் வீதியில் வெலிக்கடைக்கும், ராஜகிரியவுக்கும் இடைப்பட்ட பகுதியில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இந்தப் பகுதியில் பிளாஸ்ரிக் பவுஸர் ஒன்றினுள் போலியான கிளைமோர் பொருத்தப்பட்டு, மரப்பலகை ஒன்றுடன் இணைக்கப்பட்டிருந்தது. அத்துடன் இவற்றுடன் இரண்டு வயர்களும் இணைக்கப்பட்டிருந்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விதியைப் பயன்படுத்தும் வேளை, இந்தப் போலியான கிளைமோரை பொலிஸார் கண்டுபிடிக்கின்றார்களா என்பதைப் பரிசோதிக்கும் வகையிலும், கொலையாளிகள் அதனைப் பொருத்தி வைத்திருக்கலாமெனவும் பொலிஸார் நம்புகின்றனர்.

எனினும் அமைச்சர் கதிர்காமர் மீதான தாக்குதல் முயற்சி தோல்வியடைந்தால், அவர் நாடாளுமன்றம் செல்லும் போது, அவர் மீது தாக்குதல் நடத்தும் முயற்சியாக இது இருக்கலாமென சிரேஷ்ட பொலிஸ் விசாரணையில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# புலிகளுடன் பேசும் திட்டத்துக்கு ஜே.வி.பியினர் கடும் எதிர்ப்பு !

கொழும்பு —

விடுதலைப் புலிகளுடன் மீளவும் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டிருப்பதை தாம் கடுமையாக எதிர்ப்பதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது குறித்து ஜே.வி.பி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை விடுதலைப் புலிகள் படுகொலை செய்தனர் என விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில், அவர்களை இதிலிருந்து விடுவிக்கும் வகையில், சர்வதேச சமாதான முயற்சியாளர்கள் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இஸ்லாமிய அடிப்படை வாதிகளால் அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 தாக்குதலும், பிரிட்டனில் கடந்த ஜூலை 7 ஆம் திகதி தாக்குதலும் நடத்தப்பட்டதை அடுத்து, அந்த இரு நாடுகளும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

எனவே லக்ஸ்மன் கதிர்காமரைப் படுகொலை செய்த விடுதலைப்புலிகளுக்கெதிராக இலங்கை அரசாங்கமும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

எனவே அரசாங்கம் தற்போதைய வாய்ப்பைப்பற்றிக் கொள்ள வேண்டும். விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் களையும் வரை எந்தவொரு சமாதானமும் ஏற்படப் போவதில்லை என்பதை சர்வதேச சமூகத்துக்கு அரசாங்கம் வலியுறுத்தவேண்டும்.

துரதிஷ்டவசமாக அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு சமாதான ஆடையை அணியச் செய்ய முயற்சி செய்கிறது. எனவே சமாதானத்தை நேசிக்கும் மக்கள் அனைவரும் அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டைத் தோற்கடிக்க முன்வருவதுடன், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் ஒன்றுபட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிங்கப்பூர் வர்த்தகர் உறுதிமொழியால் கதிர்காமர் பாதுகாப்பைக் குறைத்தாராம்!

## ஐலன்ட் பத்திரிகை கூறுகிறது

கொழும்பு —

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவரான சிங்கப்பூர் வர்த்தகர் ஒருவர் - அமைச்சர் கதிர்காமருக்கு கொலை அச்சுறுத்தல் இல்லை என உறுதிமொழி அளித்ததை அடுத்தே அமைச்சர் கதிர்காமர் தனக்குரிய பாதுகாப்பைக் குறைத்துக் கொண்டதாகவும், இதனாலேயே அவர் இலகுவாககொலை செய்யப்பட்டதாகவும், கொழும்பிலிருந்து வெளிவரும் ஐலன்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

குறித்த வர்த்தகர் - அமைச்சர் கதிர்காமருக்கு நெருங்கிய நண்பர். அதேநேரம், இவர் விடுதலைப்புலிகளுடனும் நெருங்கிய தொடர்புள்ளவர். இவர் அமைச்சர் கதிர்காமரிடம் போர் நிறுத்தம் நீடிக்கும் வரை விடுதலைப்புலிகளால் எவ்வித அச்சுறுத்தலும் வராது எனத் தெரிவித்தார். இதனையடுத்து அமைச்சர் தனது பாதுகாப்பைச் சற்றுத் தளர்த்தியிருந்தார்.

பல உயர்தர அதிகாரிகளும் அமைச்சருக்குப் பாதுகாப்பு வழங்கி வந்தனர். அமைச்சர் தனது பாதுகாப்பைத் தளர்த்துமாறு கூறியவேளை, தாம் அதற்குத் தயக்கம் காட்டியபோதிலும், அமைச்சர் அதனை நடைமுறைப் படுத்துமாறு கூறியதாக அதிகாரிகள் விசாரணையாளர்களிடம் தெரிவித்தனர்.

மேற்படி வர்த்தகர் 2002 ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே போர்நிறுத்த உடன்பாடு ஏற்படுத்தப்படுவதில் முக்கிய பங்கு வகித்த ஒருவராக இருந்துள்ளார்.

இவர் பல தடவை அமைச்சர் கதிர்காமரின் வீட்டுக்குச் சென்று வந்துள்ளார். சில சமயங்களில் இவரைச் சோதனை செய்வதற்கு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அமைச்சர் கதிர்காமர் அனுமதி வழங்கவில்லை என, அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட மெய்ப் பாதுகாவலர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

ஒரு தடவை குறித்த வர்த்தகரின் சேட் பொக்கற்றினுள் மருந்தேற்றும் ஊசி இருந்தவேளை, அது தனது சலரோக நோய்க்கு பயன்படுத்தப்படுவதென அவர் கூறியுள்ளார்.

இவர் விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானுடன் நெருங்கிய தொடர்புடையவர் என்பதுடன், பல தடவை இவர் பொட்டமானைச் சந்தித்துள்ளார்.

எனவே, இவர் அமைச்சரின் கொலை தொடர்பாக விசாரணைக்குள்ளாக்கப்படுவார் என, பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக ஐலன்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# தேர்தல் மூலம் தான் நாட்டின் தலைவிதியை மாற்ற முடியும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு —

நாட்டின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாக இருப்பதாகவும், ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தேசிய ஊழியர் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேர்தல் தான் நாட்டின் தலைவிதியை முடிவு செய்யக் கூடியதாக அமையும் எனவும், அரசியலமைப்பின் கீழ் மக்களின் இறைமையைக் கேள்விக் குறியாக்காமல் அரசுத் தலைவர் - தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும் கூறிய அவர் நாட்டு மக்களின் பெரும்பான்மை ஆணையுடன் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நாட்டின் அதிகாரத்தை பொறுப்பேற்கவுள்ளேன் என்றும் நாட்டின் பொருளாதாரம் என்றும் இல்லாதவாறு மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பண்டாரநாயக்க குடும்பத்திலுள்ளவர்களின் ஆட்சிக் காலங்களில் நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி கண்டே வந்திருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

ஒவ்வொரு கட்டத்திலும் இவர்களால் அதள பாதாளத்துக்குத் தள்ளப்படும் நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியே மீண்டும் கட்டியெழுப்பி வருவது வரலாறு என்றும் அவர் மேலும் மெரிவித்தார்.

## கரப்பந்தாட்டப் போட்டி

இளவாலை—

இளவாலை கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன், இளவாலை வெண்புறா விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இரு போட்டிகள் நடைபெறவுள்ளன.

மாலை 4 மணிக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக்கழகம் மோதும் போட்டியும் - மாலை 5 மணிக்கு சிறுப் பிட்டி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை விளையாட்டுக் கழகம் மோதும் போட்டியும் இடம் பெறவுள்ளது. (58)

# உலக லெவன் அணியில் புறக்கணிப்பு; இன்சமாம் உல் ஹக் ஆவேசம்!

கராச்சி—

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான உலக லெவன் அணியில் என்னைச் சேர்க்காதது ஏன் என்று இன்சமாம் ஆத்திரத்துடன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக உலக லெவன் அணி விளையாடும் சுப்பர் கிரிக்கெட் தொடர் ஒக்டோபர் மாதம் நடைபெறவிருக்கிறது. இதில் பங்கேற்கும் உலக லெவன் அணி வீரர்கள் பட்டியல் டெஸ்ட் அணிக்கும், ஒரு நாள் போட்டி அணிக்கும் தனித்தனியாக நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

இந்த இரு பட்டியலிலும் பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் இடம்பெறவில்லை. இதனால் இன்சமாம் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளார். மிகவும் கோபமாகக் காணப்பட்டார். பாகிஸ்தானில் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.

உலக லெவன் அணியைத் தேர்வு செய்த தேர்வுக்குழுவின் தலைவர் - இந்தியாவின் முன்னாள் கப்டன் கவாஸ்கர் ஆவார். இன்சமாமின் பெயரைப் புறக்கணிக்க கவாஸ்கர் ஏதோ சதி செய்துவிட்டதாகவும் ரசிகர்கள் பரபரப்பாகப் பேசிக்கொண்டார்கள்.

தன்னை உலக லெவன் அணியில் சேர்க்காதது பற்றி விரக்தியுடன் இன்சமாம் கூறியதாவது -

நான் மிகவும் ஏமாற்றம் அடைந்திருக்கிறேன். என்னுடைய ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் வெளிப்படுத்தாவிட்டால் நான் மனிதனே அல்ல. என்னைப் புறக்கணித்திருப்பது நியாயமற்றது. எனக்கு இது மிகுந்த மனவருத்தத்தை அளித்துள்ளது.

நான் பாகிஸ்தான் அணியில் விளையாடுவதற்குத்தான் முதலிடமும், முக்கியத்துவமும் அளிக்கக் கூடியவன்.

இந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு வந்து இங்கிலாந்து அணி விளையாடவிருக்கிறது. அந்தப்போட்டிகளில் எப்படியாவது வெற்றி பெறவேண்டும் என்பதில் கவனம் செலுத் திக்கொண்டிருக்கிறேன்.

ஆனாலும், உலக லெவன் அணியில் இடம்பெறுவது கௌரவப் பிரச்சினை. என்னுடைய தன்னம்பிக்கை எப்போதும் வானளாவ உயரத்திலேயே இருக்கக்கூடியதாகும். இங்கிலாந்தை வெல்லவேண்டும் என்கிற இலட்சியத்தோடும், நம்பிக்கையுடனும் நான் இருக்கிறேன்.

உலக லெவன் அணியில் நான் தேர்வு செய்யப்படுவதற்கு உரிய முழுத்தகுதி எனக்கு இருக்கிறது. அந்த நல்ல வாய்ப்பு எப்படிக் கைநழுவிப்போனது என்பது தெரியவில்லை. இங்கிலாந்து அணியை எதிர்த்து விளையாடுவதற்கு உலக லெவன் அணியில் ஆடினால் ஒரு நல்ல பயிற்சியாக இருக்கும் என்று நினைத்தேன்.

நான் எதனால் உலக லெவன் அணிக்கு தேர்வுசெய்யப்படாமல் போனேன் என்பதை அறிந்து



கொள்ள ஆர்வமாக இருக்கிறேன். இதை எனக்குக் காரணத்தோடு தேர்வுக்குழுவைச் சேர்ந்த ஒருவர் விளக்கினால் நான் அவரைப் பாராட்டுவேன். என்னைத் திருப்திப்படுத்துவதற்காக ஏதையாவது சொல்லக்கூடாது என்று இன்சமாம் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் வீரர்கள் மியாண்டாட், ஜாகீர்கான், ஹனீப் முகமது ஆகியோரும் இன்சமாம் புறக்கணிக்கப்பட்டதைக் கடுமையாகக் கண்டித்துள்ளனர். பாகிஸ்தான் இதனால் அதிர்ச்சியடைந்துள்ளது. இன்சமாம் எவ்வளவு மனவேதனை அடைவார் என்பதை நாங்கள் உணருகின்றோம் என்றும் அவர்கள் கூறினர்.

## ஜனசக்தி சுழல் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி!

யாழ்ப்பாணம்—

ஜனசக்தி காப்புறுதியின் அனுசரணையுடனும் 'நமது ஈழநாடு' ஊடக அனுசரணையுடனும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஜனசக்தி சுழல் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளைமறுதினம் பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் மு. வேதாபரணம் தலைமையில் - டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக ஜனசக்தியின் உதவி மாவட்ட விற்பனை முகாமையாளர் டி.ஜே. ஜெசன் ஜெயகுலராஜா, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன், வடமராட்சி விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் வி.பிரியன், டயமன்ஸ் விளையாட்டுக்கழகத் தலைவர் சி.க.இராசேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் முதல்நாள் போட்டியில் ஜீவகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழகமும் - வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (12)

# விளையாட்டு

## பருத்தித்துறை லீக் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் டயமன்ஸ் அணி சம்பியனானது!

பருத்தித்துறை—

தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்திய உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டத்தில்- ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் 9 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியினர் தமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த தவறிவிட்டனர். இதேபோல ஞானமுருகன் அணியினர் பந்தைக்கொண்டு சென்றபோது அதனைத் தடுக்க முயற்சித்த கோல்க்காப்பாளர், காலில் காயமேற்பட்டு வீழ்ந்தபோதும் தனது ஆட்டத்தை மேலும் தொடர்ந்தார்.

ஆட்டம் விறுவிறுப்பை அடைந்தபோது 15 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் அரவிந்தன் மிகவும் நேர்த்தியான ஒரு கோலைப் போட்டார். அதனைத்தொடர்ந்து ஆட்டம் மேலும் விறுவிறுப்படைய - 21 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை டயமன்ஸ் அணிவீரர் பிரகாஷ் அடித்தார்.

இதனால் ஞானமுருகன் அணி மிகவும் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டபோது - அடுத்த 23 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் பிரகாஷ் மிகச்சிறப்பாக வெட்டிக் கொடுத்தபோதும், அந்த அணியைச் சேர்ந்தவர்கள் கோலாக்கத் தவறினர்.

இதனால் இடைவேளைக்கு முன்னர் டயமன்ஸ் அணியினர் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது, ஞானமுருகன் அணியினர் சிறப்பாக விளையாடி 9 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் ராசா ஒரு கோலைப்போட்டார்.

இதேவேளை டயமன்ஸ் அணி வீரர்களின் விளையாட்டு சோர்வடைந்ததுடன் தற்காப்பு விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். 15 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் வெளியில் சென்ற பந்தை எடுக்கச் சென்றபோது வெளியில் இருந்த டயமன்ஸ் அணியின் பதிலாட்டக்காரருக்கும் இவருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனால் ஞானமுருகன் அணி வீரர் ஒருவருக்கு மஞ்சள் அட்டையையும், டயமன்ஸ் அணியின் பதிலாட்டக்காரர் ஒருவருக்கு சிவப்பு அட்டையும் நடுவரால் காட்டப்பட்டது.

அடுத்த 20 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் கோல் காப்பாளர் பந்தைப் பிடிப்பதற்காக விழுந்தபோதும், ஞானமுருகன் அணிவீரர் ராஜா அந்தப் பந்தை கோலாக்கத் தவறிவிட்டார். இதுவே அவர்களின் தோல்விக்கு வழிகோலியது.

அதன்பின்னர் 22 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் கோல் காப்பாளர் கோல் பிரதேசத்தை விட்டு வெளியே சென்று கைகளால் பந்தை பிடித்தமைக்காக நேர் உதை வழங்கப்பட்டபோதும் அதனை டயமன்ஸ் அணியினர் கோலாக்கத் தவறிவிட்டனர்.

அதன்பின்னர் ஆட்டம் முடிவடைவதற்கு ஒரு நிமிடம் இருக்கும்போது ஞானமுருகன் அணியினரால் அடிக்கப்பட்ட பந்து கோல்க்காப்பாளர் இல்லாதபோது டயமன்ஸ் அணி வீரர் அனுராகாந்தினால் தடுக்கப்பட்டது. இந்தப் பந்தை அனுராகாந் கோல்க் கம்பத்தின் உள்ளிருந்து தடுத்தார் என்ற சர்ச்சையை ஞானமுருகன் அணியினர் எழுப்பினர் அதை ஏற்காத மத்தியஸ்தருடன் முரண்பட்டனர்.

இதனால் மத்தியஸ்தர் - ஞானமுருகன் அணியின் இருவீரர்களுக்கு சிவப்பு அட்டையைக் காட்டியதால் ஞானமுருகன் அணி தொடர்ந்து விளையாடுவதை நிறுத்திக்கொண்டது. இதனால் டயமன்ஸ் அணி ஞானமுருகன் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சம்பியனானது.

இந்தப் போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக டயமன்ஸ் அணியைச் சேர்ந்த ம.பிறேம்குமாரும், சிறந்த ஆட்ட நாயகனாக டயமன்ஸ் அணியைச் சேர்ந்த க.அரவிந்தனும், சிறந்த கோல்க்காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த ஜேம்ஸ் கொவின்ரனும் தெரிவுசெய்யப்பட்டனர். (12)

## 15, 17 வயது பிரிவுகள் கிரிக்கெட் அரையிறுதிக்கு தெரிவான அணிகள்

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் 15 வயதுப்பிரிவு, 17 வயதுப் பிரிவு போட்டிகளின் இரண்டாம்சுற்று ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன.

இதன் அடிப்படையில் 15 வயதுப் பிரிவில் - யாழ்.மத்தியகல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி என்பன அரையிறுதிப்போட்டிக்கான தகுதியைப் பெற்றுள்ளன.

17 வயதுப் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி என்பனவும் அரையிறுதிப் போட்டிக்கான தகுதியைப் பெற்றுள்ளன.

15 வயதுப் பிரிவு அரையிறுதிப் போட்டிகளில் - யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரியும் மோதி வெற்றிபெறும் அணிகள் இறுதிப் போட்டிக்கான தகுதியைப் பெறவுள்ளன.

17 வயதுப் பிரிவு அரையிறுதிப் போட்டிகளில் யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதி வெற்றிபெறும் அணிகள் இறுதிப் போட்டிக்கான தகுதியைப் பெறவுள்ளன.

இது தவிர அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற அஸ்ரா கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிக்கட்டப் போட்டிகளுக்காக 15 வயதுப் பிரிவிலிருந்து யாழ். இந்துக் கல்லூரி அணியும், 17 வயதுப் பிரிவிலிருந்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் தகுதிபெற்றுத் தென்பகுதிப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காகச் செல்லவுள்ளன. (58)



யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் அண்மையில் நடத்திய புதிய மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தின் பின் - சங்க உறுப்பினர்கள், தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன், யாழ்ப்பாண பாடசாலைகள் அதிபர் சங்க பிரதித் தலைவர் இராசதுரை ஆகியோருடன் எடுத்துக்கொண்ட படம். (58)



வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டிய 15 வயது ஆண்கள் அணியுடன், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையாவும், யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலபாட விரிவுரையாளரும் - யாழ்.பல்கலைக்கழக சதுரங்க அணியின் பயிற்றுவிப்பாளருமான அருணகிரி ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் மத்திய கல்லூரி வெற்றி!

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் - யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாம்சுற்று ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸில் வெற்றிபெற்றது.

யாழ்.மத்தியகல்லூரி 15 வயதுப் பிரிவு அணிக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 15 வயதுப்பிரிவு அணிக்குமிடையில் நடைபெற்ற இந்த இரண்டாம் சுற்று ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் சுயதரன் 24 ஓட்டங்களையும், டினேஸ் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்தியகல்லூரி வீரர் ஸ்ரீபன்ராஜ் 6 விக்கெட்டுக்களையும், கோபிகன், மயூரன், தனுசன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணித் தலைவர் மயூரன் 50 ஓட்டங்களையும், ஜெனோசன், விமலகாந்தன், ஜேம்ஸ், ஸ்ரீபன்ராஜ் ஆகியோர் 33, 23, 22, 19 என்ற வகையில் ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யூனியன் கல்லூரி அணியின் சார்பில் காந்தசீலன், டினோஜன் ஆகிய இருவரும் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் ஆடிய யூனியன் கல்லூரி அணி ஆட்டநேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சயந்தன், சுதர்சன், டினேஷ் ஆகியோர் முறையே 31, 24, 19 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணியின் சார்பில் தனுஷன் 2 விக்கெட்டுக்களையும், மயூரன், ஸ்ரீபன்ராஜ், சிவதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர். இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன்மூலம் இரண்டாம்சுற்று ஆட்டத்தில் பி பிரிவின் இடம்பெறும் யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்று முதல் நிலையைப் பெற்றது.

இந்தப் போட்டிக்கு முன் நடைபெற்ற மகாஜனக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியிலும் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (58)

# கலைகளை போற்றுவதாக கூறுவது எம்மை நாமே ஏமாற்றும் செயலாகும்!

## ஈழவேந்தன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம்—

கலைகளைப் போற்றுவதாகக் கூறுவது எம்மை நாமே ஏமாற்றும் செயல் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற வாசுகி - ஜெகதீசனின் நாட்டியக் கலாமன்ற விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

தமிழன் வாழாத நாடில்லை. ஆனால், தமிழனுக்கு என்றொரு நாடில்லை என்ற நிலையில் உலகின் பல நாடுகளில், ஏறக்குறைய 64 நாடுகளுக்கு மேல் சிதறுண்டு வாழ்கின்றான் தமிழன். சிதறுண்டு வாழ்கின்றான் என்பதற்கு மேலாக, சீரழிந்து போயுள்ளான் என்று கூறுவது தான் ஏற்புடையது.

மொழியிலுள்ள சொற்கள், உச்சரிப்புகள் எதையும் சரியாக அறியாத நிலையில் தமிழர் வாழ்கின்ற நாடுகள் பலவற்றில் கலைகள் பேணப்படுவதாகச் சொல்லப்படுகிறது. பலநாடுகளில், புரியாத தெலுங்கிலும், வடமொழியிலும் பாடல்கள் பாடப்படுகின்றன. அவற்றுக்கு ஏற்ப ஆடல்களும் அமைக்கப் பெறுகின்றன. இந்த நிலை தொடருமாயின் (இசை) தமிழ், இசை உருக்குலையும், தமிழரின் தனிப்பெரும் சொத்தாகக் கொள்ளப்படும் பரதநாட்டியத்தின் பாங்கு பாழடைந்து போய்விடும். தமிழர்கள் தம் மொழியை மறந்த நிலையில் "எம் கலையை பேணுகிறோம்" என்று கூறுவது நாம் பிறரை ஏமாற்றுவதற்கு மேலாக, நம்மை நாமே ஏமாற்றுகிறோம் என்பதுதான் பொருள்.

எனினும் விதிவிலக்காகப் புறநடையாக கலாசூரி என்று பட்டம் பெற்றுள்ள வாசுகி ஜெகதீசன் நெருக்கடியான கொழும்புச் சூழலில், நாட்டிய கலாமன்றத்தை முப்பது வருடமாகப் போற்றி வருவது வியந்து போற்றுவதற்குரிய செயலாகும்.

ஆடல் துறையில் தனி முத்திரை பதித்துள்ளவர் திருமதி வாசுகி ஜெகதீசன். கடந்த முப்பது ஆண்டுகளாக ஆயிரத்துக்கு மேலாக ஆடற் கலையை மாணவருக்குப் பயிற்றுவித்துள்ளார். ஒவ்வொரு மாணவர்களினதும் ஆடலைப் பார்க்கின்றபோது, வாசுகியின் தனி முத்திரை பதிந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. முதிர்ச்சியும், முயற்சியுமுள்ள குருவிடம் மாணவிகள் பயின்றதன் விளைவு குருவுக்குப் பெருமை சேர்க்கின்ற முறையில், மாணவிகளுடைய ஆடலும், பாடலும், செயற்திறனும் செம்மையுடன் அமைந்திருக்கின்றன. புரட்சிக் கவிஞன் பாரதிதாஸன் ஆடற்கலையில் மிகத் தேர்ச்சி பெற்றுள்ள தமிழ்ப் பெண்ணை அவர் அன்று வாழ்த்தியுள்ளார். கவிஞர் தமிழகத்தில் ஒரு பெண்ணை வாழ்த்தியிருக்க, ஈழத்திலோ ஆடற்கலைக்கு அழகு தேட ஆயிரக்கணக்கில் நம் ஆரணங்குகள் உருவாகி வருவது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

## பரிசுத்தினம்

யாழ்ப்பாணம்—

யாழ். இந்துக்கல்லூரியின் பரிசுத்தினம், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக டொக்டர் தி.சிறிஜெயராஜா கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களை சீதா ஜெயராஜா வழங்குவார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : து.செந்தாளன்
முகவரி : பிரான்ஸ்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........
முகவரி ..........
பிறந்த ஆண்டு: ..........



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

.......... பெற்றோர் ஒப்பம்


# தெல்லிப்பளை கூட்டுறவுச்சங்கத்தின் பணியாளர்களுக்கான ஒன்றுகூடல்

தெல்லிப்பளை—

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் ஒன்று கூடல் நிகழ்வு - எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வலி. வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு பணியாளர் சிக்கன சேமிப்புக் கடனுதவு கூட்டுறவுச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் க.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினர்களாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கமும், பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.ஐயாத்துரையும்- சிறப்பு விருந்தினர்களாக மாவட்டக் கூட்டுறவுச் சபை செயலாளர் சண்முகசுந்தரமும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.நவநீதனும் - கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவர் சி.சிவமகாராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

காலை 10மணிக்கு ச.திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெறவுள்ள ஊழியர் தொழிற்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில்-முதன்மை விருந்தினர்களாக செ. கனகசபாபதியும், யாழ்.மாவட்ட கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் பொ.புஸ்பகுமாரும் -

சிறப்பு விருந்தினர்களாக இ.இமையவனும், பூ.திருவாதவூரரும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி.சிவமகாராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மாடிக் கட்டடம் அமைப்பு

உடுவில்—

நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குப் புதிய இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த கட்டடத் தொகுதியின் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. 130 அடி நீளமும், 25 அடி அகலமும் கொண்ட இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை கல்லூரி அதிபர் க.சிவாஜி நாட்டி வைத்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் எடுத்த முயற்சியின் காரணமாகவே இந்தக் கட்டடம் அமைக்கப்படுகிறது. இந்த வருட இறுதிக்குள் கட்டடப் பணிகள் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (101)

## ஒன்று கூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்—

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் சிறுவருக்கு உதவும் திட்டத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சி.வி.கே.சிவஞானம் தலைமையில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசசெயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரமும், சிறப்பு விருந்தினர்களாக யோகிராஜன், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் குமாரசாமி சண்முகநாதன், ஆசிரியை திருமதி பா.பத்மநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 2,436 பயிற்சிப் பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் ஆசிரிய நியமனம்

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆசிரிய பற்றாக்குறையுள்ள பாடசாலைகளுக்குத் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் பயிற்சிப் பட்டதாரிகள் 2,436 பேரை நியமிக்கவுள்ளதாக, வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டதாரிகள் செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்படவுள்ளனர். இதில் 1896 தமிழ் மொழிமூல பட்டதாரிகளும், 540 சிங்கள மொழி மூல பட்டதாரிகளும் அடங்குவர் எனவும், இவர்களுள் கஷ்ரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக 5 வருடங்கள் சேவையாற்றவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே நியமிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட பரீட்சையின் அடிப்படையில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டே இடம் பெறும் எனவும் கல்வி அமைச்சின் செயலர் இ.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

# மட்டுவிலில் சிறுவர் கழகம் நடத்திய விளையாட்டுவிழா

மட்டுவில்—

யாழ்.சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் மட்டுவில் கண்ணகை சிறுவர் கழகம் நடத்திய விளையாட்டுவிழா - கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் அம்மன் கோவிலடி விளையாட்டுத் திடலில் இடம்பெற்றது.

இளைப்பாறிய யாழ்.மாவட்ட கணக்காய்வு அத்தியட்சகர் ஆ.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதமவிருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கலந்துகொண்டார். சிறப்புவிருந்தினராக யுனிசெப் அமைப்பின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் லௌறாலியனார்ட், சிறுவர் திட்ட அலுவலர் மார்ட்டீன் யாப் கலந்துகொண்டனர்.

சிறுவர் தலைமைத்துவத்தை மேம்படுத்தும் நோக்கோடு இந்த விளையாட்டுவிழா சிறுவர்களாலேயே ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டது. நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்களாக, அறிவிப்பாளர்களாக, போட்டியாளர்களாக அனைவரும் 19வயதின் கீழுள்ள மாணவர்களே ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த விளையாட்டு விழாவில் இடைவேளை நிகழ்ச்சியாக கண்ணகை முன்பள்ளிச் சிறார்களது இசையும், அசைவும் என்னும் நிகழ்ச்சி இடம்பெற்றது.

தென்மராட்சி முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுவிழாவில் முதலாமிடம்பெற்ற நிகழ்வு இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (24)

# உற்சவ காலத்தில் விசேட ஒழுங்கு

வண்ணை—

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தின் விசேட திருவிழாக்களின் போது, ஆலயப் பகுதிகளில் பக்தர்கள் ஒரு வழிப் பாதையைப் பின்பற்ற வேண்டும் என உற்சவகால விசேட செயலணியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கோரியுள்ளார். இதற்கென விசேட தொண்டர்களும் கடமையில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் ஏற்படும் சன நெரிசல், திருட்டு, பெண்கள் மீதான சேஷ்டைகளைத் தவிர்க்கும் நோக்குடனேயே இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தச் செயற்பாட்டுக்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறு செயலணி கோரியுள்ளது. (111)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கலாசார விழா 27, 28 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம்—

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலக கலாசார விழா - எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 2 மணிமுதல் இரவு 9 மணிவரை மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம்நாள் நிகழ்வு உதவிப்பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் தலைமையில், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்புவிருந்தினர்களாக முன்னாள் மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா, வடக்கு - கிழக்கு மாகாணசபை உதவிச் செயலாளர் ஆ.சுப்பிரமணியசர்மா, முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு, மானிப்பாய் பிரதேசசபைச் செயலாளர் மே.சாந்தசீலன், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கி.சிவராஜா, மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத் தலைவர் மா.செல்வராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கலையரசு சொர்ணலிங்கம் அரங்கில், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் செயலர் ரூபினி வரதலிங்கம் தலைமயில் நடைபெறவுள்ள நிகழ்வில்-பிரதமவிருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன், முன்னாள் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், சட்டத்தரணி இ.வசந்தசேனன், அதிபர் ஜெ.சூரியகுமாரி, .மானிப்பாய் அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.வெ.தமிழ்மறவன், முன்னாள் உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராசா, பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டு நாளும் இசை, நாடகம், நாட்டுக் கூத்து, நகைச்சுவை நாடகம் உட்பட, பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.



யாழ்ப்பாண மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகத்தில் கடமையாற்றி, ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கான பிரவுபசார நிகழ்வு அண்மையில் வங்கி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் வட. வலய உதவிப் பொது முகாமையாளர் மு.க.சிவபாதசுந்தரம் உரையாற்றுவதையும், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களான ஆர்.எக்ஸ்.அரசநிலை, அ.இராசநாயகம், க.சாந்தகுமார் ஆகியோர் மாலையுடன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# முகாமைத்துவ தவறுகளிற்கூடான விருத்தியெண்ணக்கருக்கள்

தொழில்மலர்

சென்றவாரத் தொடரில் முகாமைத் தொடர்பாடல் அணுகுமுறைகள் பற்றி சற்று அலசினேன். இந்தவாரம் எமது சமூகத்திலும் நிறுவனக் கட்டமைப்பிலுள்ள முகாமையாளர்கள் விடுகின்ற தவறுகள் பற்றியும், இதனால் நிறுவன வெளியீடானது எத்தகைய தாக்கத்துக்கு உள்ளாகிறது என்பதுபற்றியும் நோக்குவோம்.

**அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தஸ்தைத் தேடமுற்படல்**

முகாமையாளர்களில் பலரிடத்தில் காணப்படும் அடிப்படையான எண்ணக்கரு என்னவெனில், "எமக்குரிய அந்தஸ்த்தில் (ஸ்தானத்தில்) இருந்தால்தான் ஊழியர்களிடத்தில் இருந்து எமக்குரிய மதிப்பைப் பெறமுடியும்" என்பதாகும். இது உளவியல் ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. ஏனெனில் கௌரவம், அந்தஸ்து என்பவையெல்லாம் நாமாகத் தேடிக்கொள்ளும் ஒன்றல்ல; இவையெல்லாம் எமது செயற்பாடுகளால் தானாகவே எமக்குவந்து சேரும். இதை எதிர்பார்ப்பதும் தவறு, நாமாகத் தேடிக்கொள்வதும் தவறு.

அதிகாரமென்பதைப் பயன்படுத்தி குறிப்பிட்ட வேலைத் திட்டத்தை நிறைவேற்றினாலும் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது நிறைவான ஒரு ஆளணிச் செயற்பாட்டு வெளியீட்டை இந்த அதிகாரத்தின்மூலம் பெறமுடியாது. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு தனித்துவங்களுண்டு. இது, இந்த முகாமை அதிகாரங்கள் மூலம் முறியடிக்கப்படும்போது நிச்சயம் தொழில் ஆற்றும் வினைத்திறன் குறைக்கப்படும். இந்த நிலையை அதிகாரிகள் மட்டம் உணராத சூழ்நிலை இருந்தாலும், சக ஊழியர்களால் உணர முடிந்திருக்கும். ஆகையால் நிறுவன வழிநடத்தலுக்கு அதிகாரமென்பது ஆரோக்கியமான தொன்றல்ல. அத்தோடு இந்த அதிகாரப் பயன்படுத்தலானது- தேவையற்ற முரண்பாடுகளையும் தோற்றுவித்துவிடும்.

அத்தோடு எமக்குக் கிடைத்த பதவியானது - எமக்குரிய மதிப்பைத் தேடுவதற்கல்ல. நிறுவனத்தை வழிப்படுத்தி வெளியீட்டை அதிகரிக்கவே. ஆனால் எம்மில் பலர் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக ஊழியர்கள் சிலவற்றைச் செய்தாலும், தனது வழிப்படுத்தலின் கீழ் இயங்கவில்லை, தன்னை மதிக்கவில்லை, தனக்கு வேண்டியவர்க்கூடாக செய்யவில்லை என்று எதிர் அதிகார பலத்தை ஊழியர்கள் மீது திணிக்கின்ற பலவீனப்பட்ட முகாமையாளர்களும் எமது நிர்வாகக் கட்டமைப்பில் உள்ளனர்.

இது ஒருவகை அறிவியலற்ற ஆளுமைப் பலவீனங்களே. இதைத் திருத்திக்கொள்ள நாம் முற்படவேண்டும்.

**தீர்மானம் எடுத்தல்**

இது முகாமைத்துவத்தில் மிக முக்கியமான அம்சமாகும். இந்த முகாமைத் தீர்மானமென்கின்ற அம்சத்தினூடாக ஒரு நிறுவனம் முற்றாகவும் செயலிழக்கக் கூடும், வளம்பெற வும் கூடும்.



தீர்மானம் எடுக்கின்ற பகுதியானது- உளவியலில் மிகப் பரந்த விடயமாகும். இருப்பினும் மேல்வாரியாக இதை நாம் நோக்குவோம்.

முகாமைத்துவத்தில் ஏதாவது ஒரு விடயம் சம்பந்தமாக முடிவுகள் எடுக்கப்படும்போது, முதலில் குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாகப் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இது எந்தவகைப்பட்ட பிரச்சினை, இதனோடு சம்பந்தப்பட்ட அம்சங்கள் என்ன? என்பதுபற்றி நோக்க வேண்டும். இவற்றை அடிப்படையாகக்கொண்டு எந்த முடிவு சாத்தியமானது என தற்காலிகமாக்த் தெரிதல் வேண்டும். பின்பு இந்த முடிவால் ஏற்படப்போகும் பின்விளைவுகள் பற்றிச் சிந்தித்து, இந்த முடிவில் தேவையேற்படும் பட்சத்தில் மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் கொண்டுவந்து முடிவை நடைமுறைபடுத்தவேண்டும். நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட முடிவுகள் எடுக்கப்படும்போது, இந்த முடிவு சம்பந்தமாக எவரும் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கவேண்டும். அதாவது - முடிவு சம்பந்தமான ஒரு தெளிவுநிலை வேண்டும்.

முகாமைத்துவக் கட்டமைப்புகள், முகாமைத்துவத் தவறுகள், முகாமை அணுகுமுறைகள், ஊழியர் - முகாமையாளர் தொடர்பாடல் திறன்கள் எனப் பல விடயங்கள் பற்றி இந்தத் தொழில் மலர்த்தொடரில் ஆராய்ந்தோம்.

இந்தத் தொடரானது - முகாமை சம்பந்தமாக நடைமுறைச் சிக்கல்களை ஓரளவு தெளிவுபடுத் தியிருக்கும் என நம்புகிறோம்.

-ஆர்.கே.மேனன்- (ஆசிரியர்)

சுயதொழில்



## ஜாம் தயாரித்தல்

எங்களுடைய பிரதேசங்களில் மாம்பழம், தோடம்பழம், வாழைப் பழம், அன்னாசிப்பழம், விளாம்பழம், பப்பாசிப் பழம் என்று பல வகையான- பழங்கள் கிடைக்கின்றன. குறிப்பாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் பழ அறுவடை காலங்களில் பெருமளவு உற்பத்தி காரணமாக இவற்றைச் சந்தைப்படுத்துவதே சிரமமாக உள்ளது. எனவே இப் பழங்களைக் கொண்டு ஜாம் தயாரிப்பது மிகுந்த இலாபம் உடையதாக இருக்கும். இதனை வீடுகளில் ஓர் உபதொழிலாகவும், தொழிலாளர்கள் பல ரைச் சேர்ந்து சிறு கைத்தொழிலாகவும் மேற்கொள்ள முடியும்.

மிக ஏழ்மையான நிலையிலுள்ள மக்களைத் தவிர பெரும்பான்மையோர் ஜாமை உணவுப்பொருளாகப் பயன்படுத்துகின்றனர். இதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு.

ஹொங்கொங், சீனா, தாய்லாந்து, சிங்கப்பூர் அவுஸ்ரேலியா, நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள் போன்றவை பழவகைகளை இறக்குமதி செய்கின்றன. இந்நாடுகளுக்கு இவற்றைப் பழமாகவும், பழச்சாறாகவும், ஜாமாகவும் ஏற்றுமதி செய்வதன் மூலம் நிலையான சந்தைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். பழ அறுவடைக் காலத்தில் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் கூடிய லாபத்தைப் பெறலாம்.

தொழில்நுட்பம் இலகுவானதாயினும், இத்துறையில் மிகுந்த அவதானம் அவசியமாகிறது. தொழில்நுட்பத்தைப் பொறுத்தே ஜாமின்தரமும், சந்தைவாய்ப்பும் நிர்ணயிக்கப்படுகிறதாகையால், தொழில் நுட்பத் தேர்ச்சி மிக அவசியமாகிறது.

**மூலப்பொருட்கள்** - பழங்கள், சிற்றிக் கமிலம், சீனி பெக்ரின் கலவை.

**உபகரணங்கள்** - பழம் வெட்டும் கருவி, ஜாம் போத்தல், சீலர், தராசு, வாயு அடுப்பு, சாதாரண அடுப்பு, வெப்பமானி, துருப்பிடிக்காத உருக்குப் பாத்திரங்கள், கத்தி, பிளாஸ்ரிக் வாளிகள், ஜக்குகள், மேசை ஒன்று, போத்தல்கள்.

**ஜாம் செய்முறை**

விரும்பிய பழங்களை (மாம்பழம், அன்னாசிப்பழம், பப்பாசிப் பழம், விளாம்பழம், கொடித் தோடைப் பழம் ) - நன்கு கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும் பழங்களில் உள்ள தூசிகள், இலைக்காம்புகள், தண்டுகள் அகற்றப்பட வேண்டும். பின்னர் பழத்தின் தடித்த தோலும், விதைகளும், அகற்றப்படல் வேண்டும். தோலும், விதையும், அகற்றப்பட்ட பழங்களைப் பசையாக்கும் இயந்திரத்தில் இட்டு, கூழாக்கவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் சிற்றிக் கமிலம் கலக்கப்படல் வேண்டும்.

பின்னர் சீனியும், பெக்ரிக் கலவையும் அதனுடன் சேர்க்கப்படவேண்டும். $104^0$ - $105^0$ சென்டிகிரேட் வரை இதனைச் சூடாக்க வேண்டும். பதம் சரியாக வந்ததும் சூடாக இருக்கும் போதே இதனை துப்பரவான போத்தல்களில் ஊற்றி சீல் வைத்தல் வேண்டும்.

## தொழிலில் முன்னேற சில வரிகள்....



✦ சரியானவை என்று நிர்வாகம் எடுத்த நடவடிக்கைகள் சில நேரங்களில் தவறான விளைவுகளுக்குக் கூடக் காரணமாகலாம். அப்படியென்றால், நீங்கள் முடிவெடுக்க ஆதாரமாக அமைந்த தகவல்கள் தவறு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

✦ விளம்பரம் தேவையா என்று அலுத்துக்கொள்பவர்கள் பின்னர் வியாபாரம் தேவையா என்று நொந்து கொள்ள வேண்டியிருக்கும்.

✦ ஒரு தேசத்தின் விழுமியங்களை அங்குள்ள விளம்பரங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

✦ சிறந்த மனிதன் முதலீட்டைப் புரிந்து கொள்கிறான். சிறிய மனிதன் லாபத்தைப் புரிந்து கொள்கிறான்.

✦ ஒரே வியாபார உத்திகளை நெடுங்காலம் தொடர்ந்தால், லாபம் பெற முடியாது.

✦ தோல்வி குற்றமல்ல. தோல்விகளிலிருந்து பாடம் கற்காமல் இருப்பதே குற்றம்.

✦ ஒரு ஆபத்தை முன் கூட்டியே ஊகித்து உணர முடியுமென்றால், அதைப் பாதியளவு தவிர்த்த மாதிரிதான்.

✦ தோல்விகளைத் தோல்விகளாக ஏற்காதீர்கள். உங்களைத் திருத்திக் கொள்ள, மேம்படுத்திக் கொள்ளக் கிடைத்த வாய்ப்புக்களாக எடுத்துக் கொள்ளுங்கள்.

✦ தோல்வி என்பது ஒரு படிப்பினை.

✦ மாற்றங்கள் தேவையா என்று யோசித்துப் பாருங்கள். தேவையென்றால், அதைப் பிறரும் உணரச் செய்யுங்கள். திட்டங்களை உருவாக்குங்கள். நிறுவனத்தில் மாற்றத்தை முழுமையாக நிறைவேற்றுங்கள்.

# திட்டவட்டமான குறிக்கோள் வெற்றியை ஈட்டித் தரும்

ஒரு விடயத்தை நாங்கள் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையின் விந்தையை ஆழமாக யோசிக்க வைக்கக் கூடிய உங்கள் கேள்விக்கான பதில், உங்களது மனதிலேயே தோன்றலாம். அது ஏதாவது ஒரு வடிவிலோ, ஒரு திட்டமாகவோ அல்லது நோக்கமாகவோ உங்கள் மனதுக்குள் சடார் என்று பாயும்.

வெற்றியடைந்து காட்டுவதற்கு ஒருவருக்குத் தேவைப்படுவதெல்லாம் ஒரு அபார யோசனை, பயன்தரும் யோசனைகளை உருவாக்குவது எப்படி?

அதைத் தெரிந்து கொள்வதற்கு முன்பு ஒரு முக்கியமான கருத்தைக் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

வெற்றி, பணம், பொருள் என்று வர ஆரம்பிக்கும்போது, படுவேகமாக வரும். இத்தனை வருடங்களாக இவை எங்கே மறைந்து இருந்தன என்று அதிசயப்படும் வகையில் ஏராளமாக வந்து குவியும்.

யார் ஓயாமல் பாடுபடுகிறார்களோ, அவர்களிடம் தான் பணம் குவியும் என்று சொல்கிறார்கள். ஆனால் நீங்களோ பணம் வர ஆரம்பித்தால் வேகமாக வந்து குவியும் என்கிறீர்கள். அது எப்படியென்று எங்களுக்குள் கேள்வி எழும்.

திட்டவட்டமான குறிக்கோளுடன் உங்கள் மனம் ஒருவிதமான கட்டுக்கோப்புக்குள் இருக்கும் போது, கடும் உழைப்பு இல்லாவிட்டாலும், செல்வம் சேர ஆரம்பிக்கும். செல்வத்தைக் குவிய வைக்கும் அந்த மன நிலையை எப்படி அடைவது?

இந்தத் தத்துவத்தின் கோட்பாடுகள் உங்களுக்கு கைவந்ததும் கூர்மையாகக் கவனித்துப் பாருங்கள் அந்த நோக்கத்தைச் செயற்படுத்துவதற்கான குறிப்புக்களைப் பின்பற்றத் தொடங்குங்கள். உங்கள் நிதி நிலைமை செழிப்படைய ஆரம்பிக்கும். நீங்கள் தொட்டதெல்லாம் உங்களுக்கு ஆதாயம் தரும் சொத்தாக மாறத் தொடங்கும்.

சராசரி மனிதன் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன வார்த்தையான சாத்தியப்படாது என்ற எண்ணம் தான் மனித சமுதாயத்தின் ஒரு பெரிய பலவீனம்.

எந்தெந்த விதிகள் ஏட்டுச் சுரைக் காயோ அவையெல்லாம் அவனுக்கு அத்துப்படி. எந்தெந்த வேலைகளை எல்லாம் செய்ய முடியாது என்பதும் அவனுக்குத் தெரியும். சாதனையாளர்களாக மாற்றும் விதிகளை நாடி, எதையும் பணயம் வைக்கத் தயாராக இருப்பவர்களுக்காக இந்தப் பக்கம் எழுதப் பட்டுள்ளது.

வெற்றி - வெற்றி என்று எப்போதும் அதே சிந்தனையில் இருப்பவர்களை வெற்றி வந்தடைகிறது. எப்போதுமே தோல்வி நினைப்பிலேயே இருப்பவர்களுக்கு தோல்விதான் கிடைக்கிறது.

எல்லாவற்றையும், எல்லா மனிதர்களையும் தத்தம் சொந்த அபிப்பிராயம் மற்றும் நம்பிக்கைகளைக் கொண்டு, எடை போடும் இன்னொரு குறை பலபேரிடம் உண்டு. சிந்தனை மூலம் பணக்காரனாக மாறுவதெல்லாம் தங்களால் முடியாது என்று இந்தக் கட்டுரையை வாசிக்கும் சிலர் முடிவு எடுப்பார்கள். வறுமை, தேவைகள், துயரம், தோல்வி என்று அதைப் பற்றிய நினைப்பிலேயே உழன்று கொண்டிருப்பது அவர்களுக்கு பழக்கமாகி விட்டதுதான் இதற்குக் காரணம்.



ஹென்றி ஃபோர்டு (Hentry Ford) தனது புகழ்பெற்ற V8 மோட்டார் காரை உற்பத்தி செய்யத்திட்டமிட்ட சமயத்தில், எட்டு சிலிண்டர்களும் ஒரே புளொக்கில் இடம் பெறும்படி ஒரு என்ஜினை வடிவமைக்க விரும்பினார். இதற்கான வடிவமைப்பைத் தயாரிக்கும் படி பொறியியலாளர்களுக்கு உத்தரவிட்டார். இது சாத்தியமில்லாத விடயம் என்பது பொறியலாளர்களுக்குத் தெரிந்திருந்தாலும் காகிதத்தில் வரை படத்தை வரைந்தார்கள்.

எப்பாடுபட்டாவது அதைத் தயார் செய்யுங்கள் என்றார் ஹென்றி. ஆனால், அது சாத்தியமில்லை - இது பொறியியலாளர்களின் பதில்.

வேலையில் இறங்குங்கள்... வெற்றி கிடைக்கும் வரை நீங்கள் வேலையில் இருக்கலாம். எத்தனை நாளானாலும் பரவாயில்லை என்று கட்டளையிட்டார் ஹென்றி.

அந்த நிறுவனத்தின் ஊழியர்களாகத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றால், அவர் கொடுத்த வேலையை நிறைவேற்ற வேண்டும். மாதங்கள் ஓடின. எந்த மாற்றமும் இல்லை. எப்படி, எப்படியோ முயற்சி செய்தும், ஒரு வழியும் கிடைக்கவில்லை. சாத்தியப்படவில்லை.

வருட முடிவில் பொறியியலாளர்களிடம் நிலவரம் கேட்டார் ஹென்றி. அவரின் ஆணையை நிறைவேற்ற எந்த வழியும் தெரியவில்லை என்று சொன்னார்கள்.

தாமதிக்காமல் வேலையைத் தொடருங்கள் எனக்கு அது வேண்டும். நான் அதை அடைவேன் என்று திட்டவட்டமாகக் கூறினார் ஹென்றி. தொடர்ந்து செயற்பட்டார்கள்.

இறுதியில்... அந்த ரகசியத்தைக் கண்டுபிடித்துவிடார்கள். ஹென்றியின் அசைக்க முடியாத எண்ணம் மறுபடியும் வெற்றி பெற்றது.

இந்த வெற்றிக் கதையை வார்த்தைகளுக்கு வார்த்தை துல்லியமாக விபரிக்காமல் இந்தக் கட்டுரை இருந்திருக்கலாம். ஆனால் முடிவும், அதன் சாரமும் சரியாக வந்திருக்கிறது. நினைப்பின் மூலம் செல்வந்தராக நீங்கள் யாராவது விரும்பினால், நீங்கள் நம்பிக்கை வைத்தால் நிச்சயம் முடியும் என்பது தான் ஹென்றியின் வெற்றி சொல்லும் ரகசியம். வெற்றி வெகு தூரத்திலில்லை. தொட்டுவிடும் தூரம் தான்.

ஹென்றி ஃபோர்டு ஒரு வெற்றியின் சின்னம். வெற்றியின் கோட்பாடுகளைப் புரிந்து கொண்டு, அவற்றைக் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டதால் பயனடைந்தார். அதன் ஒரு அம்சம் ஆசை. தனக்கு என்ன தேவை என்பதைத் தெரிந்து கொண்டு ஆசைப் பட வேண்டும்.

நீங்கள் இந்தக் கட்டுரையை படிக்கும்போது, ஹென்றியின் வெற்றிக் கதையை நினைத்துக் கொள்ளுங்கள். எந்த வரிகளில் அவரின் அபார சாதனை விளக்கப் பட்டிருக்கின்றதோ அவற்றைக் கவனித்துப் பாருங்கள். ஹென்றி ஃபோர்டை செல்வச் சீமானாக்கிய அந்தக் குறிப்பிட்ட கோட்பாடுகளில் உங்கள் விரலை நகர்த்துங்கள். அவரது சாதனைகளுக்குச் சமமாக உங்களுக்குப் பொருத்தமான, உங்களுக்காகக் காத்திருக்கும் சாதனைகளை நீங்களும் சாதிக்க முடியும்.

*உங்கள் தலைவிதியை மாற்றும் கோட்பாடுகள்*

முதலாவது - திறந்த மனதுடன் தயாராக இருங்கள். இந்தக் கோட்பாடுகள் எல்லாம் ஒரு தனி மனிதனின் கண்டு பிடிப்பு அல்ல என்பதை விட வேண்டாம். பலருக்கு இந்தக் கோட்பாடுகள் பலன் தந்திருக்கின்றன.

*(தொடரும்)*



# பனை ஓலை மூலம் உற்பத்திப் பொருட்கள்

பனை ஓலை விசிறி வடிவம் கொண்டதாக இருக்கும். பனம் மட்டையின் நுனியில் இருந்து நான்கு பக்கமும் விரிவடைந்து காணப்படும். இதன் விட்டம் 2-2 1/2 அடி கொண்டதாக இருக்கும். வடலி ஓலையை வெட்டி நீத்துப்பெட்டி, திருகணை போன்ற பொருட்களை உற்பத்தி செய்வார்கள்.

பனை வளரும் காலங்களில் பச்சை ஓலை பல்வேறு தேவைக்காகவும், காய்ந்த ஓலைகள் (காவோலை) வடலியின் வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டும் வெட்டப்படும்.

ஓலைகள் வெட்டப்பட்ட வடலிகள் 10-15 வருடங்கள் வளர்ந்த பின்பு வடலியைச் சுற்றியுள்ள கங்கு மட்டை வெட்டியெடுக்கப்பட்டு, தும்பு அடிப்பதற்குப் பாவிக்கப்படுகிறது.

இந்த கங்கு மட்டை - இரண்டு பகுதிகளாக உள்ளது. இந்த இரண்டு பகுதிகளில் இருந்தும் தும்பினை அடித்து எடுத்துக் கொள்ளலாம். செழிப்பான நீர்நிலை கொண்ட இடங்களில் வளரும் பனையின் அடிப் பகுதி பெருத்திருக்கும். இந்த மரங்களில் இருந்து நீண்ட மட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த மட்டைகளில் இருந்து 15 தொடக்கம் 24 அங்குலம் வரையான நீண்ட தும்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நீளம் குறைந்த தும்பு 8 அங்குலத்திலிருந்து, 24 அங்குலம் வரை பெறப் படுகிறது. உலகில் மிகவும் வலிமையான தும்பு என்று பனந்தும்பு கருதப் படுகிறது. தென்னந்தும்புடன் பனந்தும்பினை ஒப்பிடும் பொழுது, இது தென்னந்தும்பினைவிட மூன்று மடங்கு வலிமையுள்ளதாகக் காணப்படுகிறது.

வடலியானது - 15-20-25 ஆண்டுகளில் பூப்பூத்து, காய்க்கத் தொடங்குகிறது. சில இடங்களில் 20 வருடங்களிலும், வேறு சில இடங்களில் 25 வருடங்களிலும் காய்க்கத் தொடங்குகிறது. இதன் அமைப்பு நிலக்கீழ் நீரினையும், மண்ணின் தன்மையினையும் கொண்டு மாறுபடுகிறது.

வளமான மண்ணாகவும், மணல் தன்மையான தரையாகவும் ஈரலிப்புத் தன்மை கொண்டதாகவும் இருப்பின், 20 வருடங் களில் பனைமரம் காய்ப்பதனைக் காணலாம். பனைமரம் காய்த்த பின்பே இது ஆணா அல்லது பெண்ணா என்று பாகுபடுத்திக் இனம் காணமுடியும்.

வளர்ந்த பனையின் தண்டு மிகவும் கருமை நிறம் உடையதாகவும், ஓலைகள் பச்சை நிறம் உடையதாகவும் காணப்படும். புதிதாக வரும் இளம் ஓலையினை 'குருத்து' என்றும் சற்று முதிர்ந்த ஓலையை 'சார்வு' என்றும் நன்கு முதிர்ந்தவற்றை 'ஓலைகள்' என்றும் அழைப்பார்கள்.

குருத்தோலையும், சார்வும் கைப் பணிப்பொருட்கள் செய்வதற்காக வெட்டப்படுகின்றன. இவற்றிலிருந்து பாய், பெட்டி, பூக்கூடைகள், பூஞ் செடிகள் வேறும் பல கைப்பணிப் பொருட்கள் செய்யப்படுகின்றன. பச்சை ஓலைகள் கால் நடைகளுக்குத் தீவனமாக வழங்கப்படுகின்றன. பால் கறக்கும் மாடுகளுக்கு பனை ஓலைகளை தீவனமாகக் கொடுக்கும் போது, கூடுதலான பால் கறப்பதாகவும் கிராம மக்கள் கூறுகின்றார்கள்.

# மக்களின் ஒட்டுமொத்த பலத்தையும் வெளிப்படுத்தும் காலம் வந்துவிட்டது

## புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் தெரிவிப்பு



புதுக்குடியிருப்பு—

எமது இனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட பலத்தின் வெளிப்பாடுதான் இந்தச் சமாதான நடவடிக்கையாகும் என, புலிகளின்குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச புலிகளின்குரல் வானொலி மன்றத்தால் நடத்தப்பட்ட மாதாந்த முத்தமிழ்க் கலையரங்க நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

பண்டா - செல்வா ஒப்பந்தம் முதல் இன்றுவரை இலங்கை அரசால் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

போராட்டத்தில் நாங்கள் வெல்லப்படும்போது பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும். பலவீனமடைந்துவிட்டோம் எனக் கருதப்பட்டால், யுத்தம் ஆரம்பிக்கப்படும்.

ஆனால் இந்தமுறை மட்டும்தான் விடுதலைப்புலிகளின் சக்தி சர்வதேச ரீதியாக எல்லோரும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில், மக்களின் ஆதரவைப் பெற்று, நினைக்க முடியாத ஒரு பெரிய பலத்தை அடைந்துள்ளது.

இந்தப் பலத்தின் வெளிப்பாடுதான் இந்தச் சமாதானத்தின் வீழ்ச்சி. சமாதானம் என்பது சண்டை தவிர்க்கப்பட்ட சூழலில் மட்டும் அல்ல, சண்டையும் சமாதானமும் சமாந்தரமாகச் சென்று கொண்டிருக்கின்ற சூழலில்தான் இந்தச் சமாதானம் தொடர்கிறது.

ஒவ்வொருவருடைய கெட்டித்தனத்தாலும், தமிழீழத் தேசியத் தலைவரின் தீர்க்க தரிசன சிந்தனையாலும், அவரின் அறிவுரையாலும், முயற்சியாலும், மக்களுடைய விழிப்பாலும் எமது விடுதலை அமைப்பினால் தூக்கப்படுதனால் இந்தச் சமாதானம் தொடர்கிறது.

சமாதானம் ஒரு முற்றுப்புள்ளியை அடைகின்ற நிலைக்கு அண்மையில் வந்து விட்டது. படையினரின் கட்டுப்பாட்டு பகுதியில் எமது போராளிகள் நாளுக்கு நாள் அச்சுறுத்தல் சூழலுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு நாள் எமது போராளிகள் வீரச்சாவடைகின்றனர். எமது போராளிகளின் உயிர்களைக் கொடுத்துத்தான் சமாதானத்தைக் காக்க வேண்டியுள்ளது.

போராளிகளைக் கைது செய்கின்ற அளவுக்குச் சிங்களப் பேரினவாத அரசு - தனது காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. நாம் பொறுமையைக் காக்கும் வரையும் காத்துவிட்டோம். மக்களுடைய பலத்தால் எமது ஒட்டுமொத்த பலத்தையும் காட்டப் போகின்றோம். இந்தப் பலத்தைக் காட்டுவதற்கு ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய காலம் வந்து விட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு

வடமராட்சி கிழக்கு—

வடமராட்சி கிழக்கு - செம்பியன்பற்று கிராமத்தில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், நலவாழ்வு அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடத்திய இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில், சுகாதார விழிப்புணர்வை எடுத்துக்காட்டும் வகையிலான ஒளிப்படக்காட்சியும் காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி ,வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 73 முன்பள்ளிகளை அமைப்பதற்கு தொண்டர் நிறுவனம் முன்வந்துள்ளது

ஆழியவளை—

ஆழியவளை வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் முன்பள்ளிச் சிறார்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன், தொண்டர் நிறுவனங்களின் நிதியுதவியுடன் 73முன்பள்ளிகளுக்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதன் அடிப்படையில் 35 முன்பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மிகுதி 38 முன்பள்ளிக் கட்டடங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன.

இந்த முன்பள்ளிகளில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தால் 16 முன்பள்ளிகளும், வேல்ட் விசன் நிறுவனத்தால் 17முன்பள்ளிகளும், கியூமெடிக்கா நிறுவனத்தால் 10 முன்பள்ளிகளும், ரூம் ரூறிஸ்ட் நிறுவனத்தால் 13 முன்பள்ளிகளும்,சர்வோதயத்தால் 5 முன்பள்ளிகளும், வாழும் கலையகத்தால் 10 முன்பள்ளிகளும் அமைக்கப்படவுள்ளன. லயன்ஸ் கழகம், ரீ.ஆர்.ஓ நிறுவனம் ஆகியவற்றால் தலா ஒரு முன்பள்ளிக்கான நிதியுதவி ஒதுக்கப்பட்டுள்ளன. சுனாமி அனர்த்தம் காரணமாக வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சியின் கரையோரப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (122)

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**ஓகஸ்ட்- 25**

1803 : வன்னி மன்னன் பண்டாரவன்னியனால், ஆங்கிலேயரின் முல்லைத்தீவு முகாம் வெற்றிகொள்ளப்பட்டது.

1804 : யார்க் என்னுமிடத்தில் நடந்த குதிரைப்பந்தயத்தில் லிங்கால்லோ என்ற குதிரையை அலிகா மெய்நெல் என்னும் 22 வயதுடையவர் ஓட்டியதன் மூலம் முதலாவது குதிரைச்சவாரி வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

1822 : யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்த ஜேர்மனியில் பிறந்து பிரிட்டிஷில் வாழ்ந்த வானியலாளர் சேர் வில்லியம் ஹெர்ஷல் காலமானார்.

1841 : ஓஹியோவிலுள்ள ஓபர்லின் கொலிஜியட் இன்ஸ்ட்டிட்யூட் என்ற கல்லூரி முதன்முதலாக மூன்று பெண்களுக்கு கலைமானிப் பட்டம் (B.A) வழங்கியது.

1867 : மின்காந்தம் பற்றியும், டைனமோ எனப்படும் மின் பிறப்பாக்கி பற்றியும் முதன்முதலாகத் தகவல்களைத் தந்தவரும், அவற்றை உருவாக்கிக் காட்டியவருமான விஞ்ஞானி மைக்கல் பாரடே மரணமானார்.

1918 : அமெரிக்கப் போர்த்தளபாட வாரியம் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கட்டாய இராணுவ சேவையில் இருந்து விலக்களித்தது.

1918 : ஹங்கேரி அரசு யூதர்களின் சொத்துக்களையும், உடைமைகளையும் பறிமுதல்செய்து அவர்களை நாட்டைவிட்டு விரட்டியது.

1921 : ஒஸ்திரியாவும், அமெரிக்காவும் போர்நிறுத்தம் செய்து கொண்டன.

1921: அமெரிக்கா ஜேர்மனியுடன் போர்நிறுத்தம் செய்து கொண்டது.

1936: மாஸ்கோவில் ஸினோவியல் காமனேவ் உள்ளிட்ட பழம்பெரும் போல்ஷவிக் தலைவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

1937 : சீனாவின் கடற்படை முழுவதையும் ஜப்பான் தனது கடற்படைமூலம் முற்றுகையிட்டது.

1939 : போலந்தின் மீது இடம்பெறக்கூடிய எந்தவொரு ஆக்கிரமிப்பின்போதும் துணைநின்று உதவி புரிவதாக பிரித்தானியாவும், பிரான்ஸும் உறுதியளித்தன.

1949 : முதன்முதலாக அமெரிக்காவில் வர்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பு பரீட்சார்த்த ஒளிபரப்பாக ஆரம்பிக்கப்பட்டது.

1960 : பதினேழாவது ஒலிம்பிக் பந்தயம் இத்தாலியில் ரோம் நகரில் அந்த நாட்டு ஜனாதிபதி கியோவின்னி குரோஞ்சியால் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 83 நாடுகளைச் சேர்ந்த 610 பெண் வீராங்கனைகள் உட்பட 5346 வீரர்கள் கலந்துகொண்டனர்.

1970 : மத்திய கிழக்குப் பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தை நியூயோர்க்கில் தொடங்கியது.

1981 : அமெரிக்கா 1977 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி செலுத்திய வயோஜர் - 2 என்ற விண்கலம் சனிக் கோளுக்கு மிக அருகில் சென்று அதன் வளையங்கள், கட்டமைப்புப் பற்றிய தகவல்களைப் பூமிக்கு அனுப்பத் தொடங்கியது.

1989 : அமெரிக்காவின் வயோஜர் - 2 நெப்டியூனை நெருங்கியது. டிரைட்டானின் புகைப்படங்களை அனுப்பியதுடன், மேலும் இரு நிலாக்கள் இருப்பதையும் கண்டுபிடித்துக் கூறியது.

1992 : நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, பகை உணர்வுடன் இருந்த சீனாவும், தென்கொரியாவும் தமது பகைமையை மறந்து, நட்புறவோடு தூதரகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடிவுசெய்தன.

தொகுப்பு - சந்துரு

# கிளிநொச்சிப் பிரதேசத்தில் சிறப்புற நடைபெற்ற வயல்விழா

கிளிநொச்சி—

கிளிநொச்சி - பிரமந்தனாறில் வயல்விழா நேற்றுமுன்தினம் 11 மணியளவில் விவசாய போதனாசிரியர் சி.மாலினி தலைமையில் இடம்பெற்றது.

2005 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலக்கடலை (திஸ்ஸ இனம்) விதை உற்பத்தி அதிகரிப்புத் திட்ட நிகழ்வில்- கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி.சீ.ஆனந்தராசா, கிளிநொச்சி கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பி.நாமகள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட அலுவலர் செ.திருவருட்செல்வன் உட்பட, பலர் இந்த வயல்விழா நிகழ்வில் கலந்துகொண்டு நிலக்கடலை உற்பத்தியிடங்களைப் பார்வையிட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவு விவசாயிகள் நெற்கழிவான உமிகளைப் பயன்படுத்துவதில்லை. இந்த நிலையைக் கருத்திற்கொண்டு விவசாயத் திணைக்களத்தினர் - உமிகளை இயற்கைப் பசளையாகப் பயன்படுத்தலாம் என்பதை செயல்முறை ரீதியாக விளங்கப்படுத்தினர்.

பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் விவசாயிகளுடனான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ. ஆனந்தராசா கருத்துத் தெரிவிக்கையில் -

விவசாயிகள் நெற்பயிரை மட்டும் தொடர்ந்து பயிர்ச்செய்கையாக மேற்கொள்ளாது, சிறுதானிய உற்பத்தியிலேயே கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். விவசாயிகள் தொடர்ந்து நெல்லையே உற்பத்தி செய்வதால், சிறுதானிய உற்பத்திப் பொருட்களுக்கான விலை எமது மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுவதுடன், இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலும் நாம் உள்ளோம் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பி.நாமகள் கருத்துத் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுதானிய உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது. இந்த வீழ்ச்சியை சீர்செய்வதற்கு மாவட்டத்திலுள்ள சிறிய குளங்களைப் புனரமைத்து, விவசாயிகளை சிறுதானியச் செய்கையில் ஊக்குவிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சி.ஆனந்தராசா, கிளிநொச்சி மாவட்ட கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பி.நாமகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




வவுனியா - புதுக்குளம் மகா வித்தியாலய அறிவொளி சஞ்சிகை வெளியீட்டுவிழா நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக வியாபாரக் கற்கைநெறிப் பீடாதிபதி சி.நந்தகுமார் முதல் பிரதி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

படம்: கனகரவி

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

அனுபவத்தை ஒட்டி மனிதர்கள் ஞானவான்கள் ஆவதில்லை. அனுபவம் பெறத் தயாராகும் திறமையே ஞானத்துக்கு வழி.
-பெர்னாட்ஷா-

## நமது நோக்கு

### செய்தியாளர் மீதான ஜே.வி.பியினரின் தாக்குதல் பத்திரிகைச் சுதந்திரம் மீதான அச்சுறுத்தலே...!

ஒருகாலத்தில் மிகக்கொடூரமான - ஈவிரக்கமற்ற கொலைகளைப் பெரும் எண்ணிக்கையில் செய்து - சடலங்களை டயர்கள் போட்டு சந்திக்குச் சந்தி எரித்தும், கங்கைகளில் தள்ளி மிதக்கவிட்டும், பீதியூட்டும் நடவடிக்கைகளில் இறங்கி வரலாறு படைத்தவர்கள் ஜே.வி.பி யினர் என்பது ஊரறிந்த, உலகறிந்த விடயம்.

ஏன் அதிகம் சொல்ல வேண்டும். இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே ஒரு சமயம் தனது கணவரைக் கொலை செய்த கொடியவர்கள் என ஜே.வி.பியினரை விரல்சுட்டிக் குற்றஞ்சாட்டிய சம்பவமும் நடந்தேயுள்ளது.

இந்த முன்னாள் புரட்சிவாதிகளின் சோஷலிஸ வேசம் கலைந்து வெகுநாட்களாகிவிட்டது. இப்போது அவர்கள் பேரினவாதிகள். தமது அரசியல் இலாபகரங்களுக்காக இனவாத கோஷம் போடத் தொடங்கியுள்ளார்கள். ஏன் இப்போது, நீண்டகாலத் தலைமறைவு வாழ்க்கையிலிருந்து கடந்த தேர்தலின் பின்னர் தலைகாட்டத் தொடங்கி, தன்னை விட்டால் வேறு எவருமில்லையென்று வாய்கிழியப் பேசிவரும் ஜே.வி.பியின் தலைமறைவுத் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவே பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புகொண்ட ஒருவர் என்றும், கைது மற்றும் விசாரணைகளில் இருந்து தப்புவதற்காகவே லண்டனில் தலைமறைவானார் என்றும் கூறப்படுகிறது.

இதனைவிடவும் ஜே.வி.பியினர் பலர்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் இன்னும் விசாரிக்கப்படாமல் கிடப்பில் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, சாத்தான்கள் வேதம் ஓத வெளிக்கிட்டமைக்கு ஒப்ப, நேற்று முன்தினம் படுகொலைகளைக் கண்டித்துக் கொழும்பில் ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளமையானது, சந்தர்ப்பவாத அரசியலின் ஓர் அங்கமாகவே பார்க்கக் கூடியதாகவுள்ளது.

படுகொலைகளைக் கண்டிப்பது நியாயமானது. அதனை எவரும் தடுக்கப் போவதுமில்லை. ஆனால், கண்டிப்பவர்களின் யோக்கியத்தைப் பற்றிய எண்ணம் தோன்றும் போது அது அர்த்தமற்ற தொன்றாகிவிடுகிறது.

ஏற்கனவே சமாதான முயற்சிகளை அதன் ஆரம்பத்திலிருந்தே கண்டித்தும், எதிர்த்தும், நிராகரித்தும் வந்த ஜே.வி.பியினர், பின்னர் சுனாமியால் பாதிப்புக்குள்ளான மக்களின் மனிதநேய நிவாரணப் பணிகள் - மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்கான பொதுக்கட்டமைப்புக்கு எதிராகவும் கோஷமிட்டுப் புரட்சி (!?) செய்து அதனைச் செயலற்ற நிலைக்குள்ளாக்கிவிட்டு அதனை வைத்து அரசியல் பண்ண முயன்று கொண்டிருக்கும் இவர்கள் - மனித உரிமைகள் மற்றும் மனிதநேயம் குறித்துப் பேசுவதற்கு எந்த அருகதையும் அற்றவர்கள் என்பது இப்போது சர்வதேச அளவில் நன்கு தெரிந்த விடயமாகியும் உள்ளது.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து ஓராண்டாகப் போகும் நிலையில், பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சர்வதேச உதவிகள் கிடைப்பதை தமது பொதுக்கட்டமைப்புக்கான எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் தடுத்து நிற்கும் ஜே.வி.பியினரின் "மனித நேயம்" பற்றி எழுத வேண்டியதில்லை.

இது ஒருபுறம் இருக்க - கடந்த காலங்களில் கொழும்பில சிங்கள ஊடகவியலாளர்கள் பொலிஸ் மற்றும் படைத்தரப்பினரால் தாக்குதலுக்குள்ளானபோது ஊடகவியலாளர்களின் ரட்சகர்கள் போன்று தம்மைக் காட்டிக்கொண்டு ஜே.வி.பி நடத்திய கண்டனப் பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நாடறியும்.

ஆனால், நேற்றுமுன்தினம் கொழும்பில் இவர்கள் நடத்தய ஆர்ப்பாட்டப் பேரணியின்போது செய்தி சேகரிக்கச்சென்ற பத்திரிகையாளர் ஒருவரை இந்த முன்னாள் புரட்சியாளர்களே தாக்கியுள்ளார்கள். கைது செய்து அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தும் உள்ளார்கள்.

இவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணியைப் படம்பிடித்துக் கொண்டிருந்த செய்தியாளரைத் தாக்கிய இந்த ஜே.வி.பி கும்பல் அவருடைய வீடியோ கமரா, கைத்தொலைபேசி ஆகியவற்றையும் அபகரித்துள்ளனர்.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றப்புலனாய்வுத் துறையினரால் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இத்தனைக்கும் இந்த ஊடகவியலாளர் ஒரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தமிழர் என்பதால் இவரை விடுதலைப்புலியாக அடையாளப்படுத்தும் அநாகரிகத்தை ஜே.வி.பியினர் செய்துள்ளனர். இவரை நேராகப் பொலிஸார் கைது செய்திருந்தால் அது வேறுவிடயம்.


ஜே.வி.பியினர் கைதுசெய்து, பொலிஸாரிடம் ஒப்படைக்குமளவுக்கு அவர்களுக்கு அதிகாரமளித்தது யார்?

எதுவானாலும் அண்மைக் காலமாக தமிழ் ஊடகவியலாளர்கள் மீது பிரயோகிக்கப்பட்டுவரும் வன்முறைகள், அவமதிப்புகள், பாதுகாப்பு உத்தரவாதமற்ற நிலையில் இருக்கும் தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி, அவர்களை அந்தத் துறையைவிட்டு அஞ்சி விலகவைக்கும் உளவியல் நடவடிக்கைகளாகவே கருத வேண்டியுள்ளதாக தமிழ பத்திரிகைத்துறை சார்ந்தோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தநிலை தொடர்வது ஜனநாயகத்துக்கு விரோதமான ஒன்றேயாகும். ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்துவிட்டதாகக் கூறும் ஜே.வி.பியினரில் இன்னமும் பழைய வன்முறை மற்றும் கொலைக் கலாசாரத்தின் இரத்தவாடை வீசுவதை இந்தச் சம்பவம் தெளிவாக உணர்த்துகிறது.

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

## நாடும் நடப்பும்




[illegible] பின்னணியில்...

# புலிகளை ஒழித்துக்கட்டி தமிழர் தாயகத்தைக் கவர கபட முயற்சி!

இலங்கையில் சமாதானம் ஏற்படாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாது. விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள், கொலைகாரர்கள் என்று முத்திரை குத்தி அழித்து ஒழிப்பதிலேயே சிங்கள பௌத்த மேலாண்மைவாதப் பேரினவாதிகள் ஒரே குறியாக இருக்கின்றனர். கதிர்காமரின் கொலையுடன் சம்பந்தப்பட்ட அவசரகாலச்சட்டம் பழையபடி தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்யவும், சித்திரவதை செய்யவும் வழி வகுத்திருக்கிறது. அரச பயங்கரவாதம் மீண்டும் தலையெடுத்திருக்கிறது. பழைய "பயங்கரவாத" சம்பவங்களை மறைத்து அல்லது தமிழ் மக்கள் தங்களிடம் உதவிக்கு வரவேண்டும் என்பதற்காகவோ என்னவோ சங்கரி, டக்ளஸ் கம்பனிகள் விடுதலைப்புலிகளே கொலை செய்கிறார்கள் என்று கூச்சல் போட்டுத் திரிகிறார்கள். சிங்கள, ஆங்கில ஊடகங்களும், ஜே.வி.பி, ஹெல உறுமய பிக்குகளும் விடுதலைப்புலிகளே கொலை செய்கிறார்கள் என்று கூக்குரல் இட்டு, உலக நாடுகள் மத்தியில் முன்பு கதிர்காமர் செய்த பிரசாரத்தை இப்போது அவர் பெயரால் தொடர்ந்து செய்கிறார்கள். இதன்மூலம் தாங்கள் எந்தப் பாவமும் செய்யாத புனிதர்களாகவும் காட்டிக்கொள்கிறார்கள் என்று ஆத்திரத்துடன் குரலை உயர்த்திப் பேசியவாறு வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

என்ன காலையிலேயே சூடாக இருக்கிறீர் என்ன விஷயம் என்று கேட்டேன்.

பின்னே என்ன? பொய்யும், புளுகும், புனைபுரட்டும், ஏமாற்றும், வஞ்சகமும்தான் இன்று நாட்டில் மலிந்துபோய்விட்டது. வட அயர்லாந்தில் விடுதலைக்காகப் போராடியவர்கள் ஆயுதங்களைக் களைந்துவிட்டார்கள். சூடானில் போராட்டம் முடிந்துவிட்டது. இந்தோனேஷியாவில் ஆசே மாநிலத்துக்கு தனியாட்சி கேட்டுப் போராடியவர்கள் ஆயுதங்களைக் களைய முன்வந்துவிட்டார்கள். விடுதலைப்புலிகளிடமிருந்தும் ஆயுதங்களைக் களையவேண்டுமென்று சில சிங்கள அரசியல்வாதிகளும், சில ஊடகங்களும் குரல்கொடுக்கின்றன. இதேசமயம் கொழும்பில் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றைக் கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்றான "சுடர் ஒளி" பத்திரிகைக்காகச் செய்தி எடுக்கச்சென்ற புகைப்படப் பிடிப்பாளர், ஜே.வி.பி ஆதரவாளர்களால் நையப் புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார். இவரிடம் பத்திரிகையாளர் என்பதற்காகத் தகவல் திணைக்களத்தால் வழங்கப்படும் அடையாள அட்டை இருக்கவில்லை என்று பொலிஸார் பின்னர் தெரிவித்திருக்கின்றனர். தகவல் திணைக்களத்தின் அடையாள அட்டை இல்லை என்பதற்காக கோட்டையில் ரயில் நிலையத்துக்கு முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தைப் படம்பிடித்தது குற்றமா, சட்டவிரோதமா?

தமிழ்ப் பத்திரிகையாளர்கள் புலிகள் என்று குற்றம் சுமத்துவது பேரினவாதிகளின் வாடிக்கை. முன்பு வீரகேசரியில் கஜனும், வவுனியா மாணிக்கவாசகரும் இப்படித்தான் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்தார்கள். தமிழ் ஊடகவியலாளர்கள் எல்லோரும் புலிகள் என்றும், புலிகளின் செய்திகளை எடுப்பதும் வெளியிடுவதும், படங்களைப் பிரசுரிப்பதும் "தேசவிரோதம்" என்றும், தங்களைத் தேசப்பற்றாளர்கள் ஆக்கிக்கொண்டிருக்கும் பேரினவாதிகள் நிர்ணயித்துக்கொள்கிறார்கள். இதேசமயம் மன்னாரில் தொழிற்பயிற்சிக்காகத் தங்கியிருந்த பதினான்கு தமிழ்ப் பெண்பிள்ளைகள் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். கொழும்பில் இளம் பெண்களும், இளைஞர்களும் சந்தேகத்தின்பேரில் பழையபடி கைதுசெய்யப்படுகிறார்கள். தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் காணாமல் போகும் செய்திகளும்கூட இனி வெளிவரலாம் என்று பரமசிவம் சொன்னார்.

வவுனியாவில் பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவர் கொழும்பில் அவரது வீட்டில்வைத்து இரகசியப் பொலிஸார் என்று காட்டிக்கொண்டவர்களால் கடத்திச்செல்லப்பட்டு, சில தினங்களின் பின் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டபின் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். இந்தச் செய்தியை வெளியிட்ட கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரி - விடுதலைப்புலிகளே இதைச் செய்ததாகத் தெரிவித்திருக்கிறது. பம்பலப்பிட்டி, வெள்ளவத்தைப் பகுதியில் ஒரு சொத்து வாங்குவதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடந்த சமயத்தில் இந்த வர்த்தகரிடம் ஐம்பது இலட்சம் ரூபாயைப் புலிகள் கேட்டதாகவும் இப்பொழுது புலிகளே அவரைக் கடத்திச் சென்றதாகத் தெரிவதாகவும் செய்தி வெளியிட்டிருக்கிறது. அதாவது இந்த வர்த்தகரை புலிகளே கடத்திச் சென்று பணம் பெற்றதாகச் செய்தி கூறுகிறது. இதுபோல் முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பில் போய் இறங்கியதும் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டு குருநகர் இளைஞர்கள் பற்றிச் செய்தி வெளியிட்ட போதும் புலிகளின் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த இருவர் கருணாகுழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகச் செய்தி வெளியிட்டிருந்ததும் இதே பத்திரிகைதான். இதுபோன்ற விஷமத்தனமான செய்திகளைக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகங்கள் வெளியிடுவது வழக்கம் என்று நான் சொன்னேன்.


கிழக்கில் திருகோணமலை நகரில் இரவோடிரவாகப் புத்தர் சிலை வைக்கப்பட்டதும் தமிழர் தாயகப் பகுதியில் ஆக்கிரமித்துள்ள இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்களில் புத்தர் சிலைகளும், விகாரைகளும் அமைக்கப்பட்டுவருவதும் இப்போது மாதகலில் புத்த விகாரை, சங்கமித்தை வந்திறங்கிய இடம் என்று கூறி அமைக்கப்பட்டிருப்பதும் புத்தரை வழிபடுவதற்காக அல்ல. இலங்கையில் வடக்கும்கிழக்கும் தமிழர் தாயகமல்ல அவை இலங்கையில் சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமான பிரதேசமே என்று வெளி உலகத்துக்கு எடுத்துக் காட்டும் நோக்கம் கொண்டதேயாகும் என்று பரமசிவம் எடுத்துச் சொன்னார்.

தமிழ் இனம் இலங்கையிலிருந்து அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பதே சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளின் ஒரே குறிக்கோள். இதை வைத்தே விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் என்று உலக நாடுகள் மத்தியில் பிரசாரம் செய்து வருகிறார்கள். லக்ஷ்மன் கதிர்காமர் இதைத் தெரிந்துதான் செய்தாரா? தெரியாமல் அரச விசுவாசத்திற்காகச் செய்தாரா? என்பது தெரியவில்லை. ஆனால் தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையானால் போதும் என்பது போல கடந்த தேர்தலில் தன்னைப் புறக்கணித்ததற்காகச் சங்கரியும், தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்குவதற்காக டக்ளசும் தமிழ் இனமே அழிக்கப்டுவதாக இருந்தாலும் கூட புலிகளுக்கெதிரானது என்பதால் ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளை அழித்தால் தமிழ் இனத்தை இலங்கையில் அழித்துவிட லாமென்பது சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள் நன்கறிந்தது. இதனால்தான் சமாதான முயற்சிகள், பேச்சுவார்த்தைகள் எல்லாம் வெறும் கபட நாடகமேயொழிய இதய சுத்தியோடு மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடல்ல. இதனால்தான் பொய்யும், புளுகும், புனைபுரட்டும் வஞ்சனையும் நிறைந்த செயல்கள் இவை நாட்டில் ஒருபோதும் அமைதியையோ, அபிவிருத்தியையோ கொண்டுவரப் போவதில்லை என்று சொன்னேன். தமிழ் மக்கள் இனி விடுதலைக்கு ஒரே சிந்தனையுடன் ஒரே குரலாக முனைந்து முன்செல்ல வேண்டியதே ஒரே வழி என்று சொல்லியபடி நண்பர் பரமசிவம் நகர்ந்தார்.


# உணவகமாக மாற்றப்படும் ரஷ்யாவின் பூரன் விண்ஓடம்

பூரன் புனைவரைவு



(21.08.2005ஆம் திகதியின் தொடர்ச்சி...)

பூரன் விண்ஓடம் உணவு விடுதியானதன் மர்மம் என்ன?



புனைவரைவு


விண்வெளிப்பயணங்களின் முன்னோடி நாடு முன்னாள் சோவியத்யூனியனின் ரஷயா. முதல் செய்கோள் ஸ்புட்னிக்1,முதல் விண் பயணி யூரிககாரின் உட்பட விண்வெளி முதன்மைகளைக் கொண்ட நாடு ரஷ்யா. இன்றும் விண்பயணத்தில் பாதுகாப்பு உத்தரவாதம் கொண்டதாக ரஷ்யப் பயணங்களே விளங்குகின்றன.

தற்போது ரஷ்யா பயன்படுத்தும் மனிதப் பயணங்களுக்கான சோயுஸ் விண்கலம் அதன் மூன்றாம் தலைமுறை விண்கலம்.

அமெரிக்கா பயன்படுத்தும் விண்ஓடங்கள் நான்காம் தலைமுறை விண்கலங்கள்.

இதேபோல் ரஷ்யாவும் 4ஆம் தலைமுறை

விண்ணில் பூரன்



விண்கலமாக விண்ஓடங்களைத் தயாரிக்கும் முயற்சி மற்றும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

உண்மையில் விண்பயணங்களுக்கான விமானவடிவ விண்கலங்களின் புனைவரைவு ரஷ்யாவில் 1930களிலேயே ஆரம்பிக்கப் பட்டுவிட்டது. அந்தக் காலப்பகுதியில் விண் பயணங்களுக்கான தொலை தூரப்பயண ரொக்கட்கள் கூட தயாரிக்கப்படாத காலம். ஆனால் அந்தக் காலத்திலேயே விண்வெளிப் பயணங்களுக்கான புனைவரைவுகள் ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்டன. ரஷ்யாவின் விண்பயண தொழில்நுட்ப முன்னோடியான செர்கேய் கோரலெவ் இந்தப்புனைவரைவுகளை மேற்கொண்டார். இவரே விண்கலங்களின் வடிவமைப்பில் விமான வடிவ விண் கலங்களையும் வரைவு செய்தார். இதற்கு ரொக்கட் கிளைடர் என்று பெயரிடப்பட்டது. இதன் மாதிரிப்பெயர் RP-318 இதேகாலத்தில் ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக்காலத்தில் இது பற்றிய ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அவர்களின் நோக்கம் இந்த வகையில் போராயுதங்களை உருவாக்குவதாக இருந்தது. விண்பயணத்துக்கு ஆதாரமான ரொக்கட்களை முதலில் உருவாக்கியவர்கள் ஜேர்மனியர்கள். அவர்கள் உருவாக்கிய ரொககட்கள் இரண்டாம் உலகப்போரில் பிரிட்டனைத் தாக்கும் போராயுதங்களாகவே பயன்பட்டன.அது V2- என்ற பெயருடையது. இதைவிட ஜேர்மனி இன்னொரு ரொக்கட் ஆயுதத்தைச் செய்திருந்தது. அது தரையிலிருந்து புறப்பட்டு, பூமியின் வளிமண்டலத்தைக் கடந்து, விண்வெளிக்குச் சென்று பின் விமான வடிவுடையதாக - பூமியின் வளிமண்டலத்துள் நுழைந்து ஒரு கிளைடராக தரையிறங்கி அந்த வேளை வெடித்துச் சிதறும் வகையில் அது வரைவு செய்யப்பட்டது. அப்போது ஜேர்மனி தவிர வேறு எந்த நாடும் ரொக்கட்களை ஆயுதங்களாகப் பயன் படுத்தும் தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கவில்லை. ஜேர்மனி ரொக்கட்டை விண்ணுக்குச் செலுத்தி, அதை தரையிறக்கி இலக்கை அழிப்பது பற்றிய அபிவிருத்திகளைச் செய்திருந்தது. இந்த விண்வெளி விமான வடிவ ஆயுதத்துக்கு **antipode bomber** என்று பெயரிடப்பட்டது. இதனை வரைவு செய்தவா்கள் ஜேர்மனி போர்த்துறை விஞ்ஞானிகளான யூஜின் சாங்கர்,இரின் பிரெட் ஆகியோராவார். பிரெட் ஒரு கணித நிபுணர். இந்த ஆயுதம் மூலம் அமெரிக்காவின் நியூயோர்க்கை அழிப்பதே நோக்கமாகும். 2ஆம் உலகப் போரின் முடிவில் ஜேர்மனியின் ரொக்கட் ஆயுதத் தளங்களை அமெரிக்காவும், ரஷ்யாவும் கைபற்றின. இதன்போது ஜேர்மனியின் முதன்மை ரொக்கட் விஞ்ஞானிகளையும், ரொக்கட்களையும் அமெரிக்கா கைப்பற்றிச் சென்றது. இவற்றின் உதவியுடன் தான் அமெரிக்கா விண் பயணங்களை ஆரம்பித்தது. உலகப்போர் முடிவில் சாங்கரின் ரொக்கட் ஆயுத வரைவுகளின் பிரதிகள் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் கிடைத்தன. அமெரிக்க விமானப் படை ஆரம்பத்தில் டைனா சோர் என்ற திட்டத்தில் தனது டைற்றன் 3 ரொக்கட் மூலம் மாதிரி விமான வடிவ விண் கலத்தைச் சோதித்துப்பார்த்தது. இதேபோல் ரஷ்யாவிலும் மேற்கொள்ளப்பட்டது. விளாடிமீர் செலோமீ என்ற ரஷ்ய விஞ்ஞானி இதற்காக அதிகம் உழைத்திருந்தார்.

1960களின் நடுப்பகுதியில் ரஷ்யாவின் மிகோயன் நிறுவனத்தினர் - சிறியவகை விமான வடிவ விண்கலங்களை வரைவு செய்தனர். அவர்கள் மிகை வேக விமானங்களில் இந்தச் சிறிய விண் ஓடத்தைக் காவிச் சென்று, விண்ணுக்கு ஏவும் திட்டத்தை கொணடிருந்தனர். இது வரைவு வடிவத்திலேயே இருந்தது.

1970களில் அமெரிக்கா விண்பயணத்துக்காக விண் ஓடங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அந்தக் காலத்தில் ரஷ்யாவும் - விண்ஓடங்களுக்கான திட்டத்தை துரிதப்படுத்தியது. ரஷ்யா விண் ஓடங்களை விண்பயணத்துக்காகவன்றி, அணுஆயுதங்களை விண்வெளிக்கு கொண்டு செல்வதற்கான வாகனமாகவே பயன்படுத்தத் திட்டமிட்டிருந்தது. 1976ல் விண்ஓடங்களை உருவாக்க ரஷ்யா முடிவு எடுத்திருந்தது.

அப்போது இந்தத் திட்டத்துக்கு இடப்பட்டிருந்த பெயர் எனோ்ஜியா-பூரன் எனப் பெயரிடப்பட்டிருந்தது.

இதில் எனோ்ஜியா விண்ஓடத்தைச் செலுத்தும் ரொக்கட்டின்பெயராகும். புரன் விண் ஓடத தின் பெயராகும். இதற்காக ரஷ்யா தனது முன்னைய புனைவரைவுத் திட்டங்களை மேற்கொண்டிருந்த, நிறுவனங்கள் யாவற்றையும் ஒன்றிணைத்து பூரன் உருவாக்கத்துக்கு அமைப்பு ஒன்றை உருவாக்கியது. பூரன் உருவாக்கம் 1980ஆம் ஆண்டுகளின் நடுப் பகுதியில் தான் முடிந்தது. ஆனால் அமெரிக்கா 1980 முதல் தனது விண்ஓடங்களைப் பயணத்துக்கு பயன்படுத்தத் தொடங்கியது.

ரஷ்யா- பூரனில் பயன்படுத்தப்பட்ட எனோ்ஜியா ரொக்கட்தான் உலகில் அதி கூடுதல் எடையை விண்ணுக்கு கொண்டு செல்லும் ரொக்கட்டாக அமைந்தது. 1988இல் பூரன் விண் ஓடம் கட்டிமுடிக்கப்பட்டு, அதன வௌளோட்டப்பயணம் நடைபெற்றது. மனிதர்கள் எவரும் பயணிக்காது வெறுமையாக தானியங்கி மூலம் பூரன் விண்வெளிக்குச் சென்று பூமியை வலம் வந்து வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

பூரனின் இந்த முதற் பறப்பு வேளையில் ரஷ்யாவின் சோவியத் யூனியன் மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்தது. 1991இல் சோவியத் உடைந்ததும் இங்கு குறிப்பிடப்படவேண்டும். 1988இல் சோவியத்தின் பொருளாதார வீழ்ச்சியால் பூரனுக்கான நிதியை அது நிறுத்தியது. இதனால் அடுத்த பயணங்களை பூரன்மேற்கொள்ள முடியாது போனது. 1991ஆம் ஆண்டில் சோவியத் கலைக்கப்பட்ட பின்னர், 1993ஆம் ஆண்டில் பூரன் திட்டம் அதிகார பூர்வமாக நிதியின்மை காரணமாக நிறுத்தப்பட்டது.இதுதான் பூரனின் பரிதாப மரணம். சர்வதேச அளவில் தனியாரிடம் இதற்கு முதலீடு கேட்கப்பட்டபோதும், அதுதோல்வியடைந்தது. 1994ஆம் ஆண்டில் பூரன் மொஸ்கோவின் கோர்கி பூங்காவில் ஒரு உணவு விடுதிக்காக நகர்த்தப்பட்டது.அங்கு விண்வெளி உணவு தயாரித்து விற்கப்படுதல் பூரன் உணவகத்தின் சிறப்பு.இது கூடத் திட்டமே. இப்போதும் பூரனில் உணவு விடுதிக்கான வடிவமைப்பு நடககின்றது. இன்னும் பூரன் விண்ஓடு உணவு விடுதி திறக்கப்படவில்லை.இப்பொழுது பூரனில் நுழைந்து, அதனுள் பார்க்க காவலாளி 2 டொலர்களை வாங்குகிறாராம். இது கட்டணம் அல்ல. காவலாளி பெறும் லஞ்சம்.


பூரன் இரு தட்டுகளைக்கொண்ட உணவகமாக மாறிக்கொண்டிருக்கிறது.இதில் விண்வீரர்கள் தங்கும் பகுதிதான் சமையலறை.

பூரனுக்கு அடுத்தபடியாக பிடிச்கா என்ற விண்ஓடமும் ரஷ்யாவால் கட்டப்பட்டது. ஆனால் அது முழுமைப்படுத்தப்படவில்லை.

1993ஆம் ஆண்டில் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ஸ்ரின் பூரன் திட்டத்தை மூடிய பின் பூரன் உற்பத்தி நிலையம் அகற்றப் பட்டது. குறிப்பாக பூரனிலிருந்து எனோ்ஜியா என்ற ரொக்கட் கழற்றி சிதைக்கப்பட்டது. பூரன் சிதைப்புவேளையில் தொழிலக கூரை விழுந்து 8 போ் உயிரிழந்தனர். கடைசி கட டத்தில் தொழிலகத்தில் 5 பூரன் கள் கட்ட மைப்பில் இருந்தன.

இதன்பின் பூரன்களை விற்க இணையத் தளங்கள் வழி ஏலத்தில் விற்கப்பட்டது. இவற்றில் ஒன்று 2000 ஆண்டில் அவுஸ்ரேலிய வணிகர் ஒருவரால் விலைக்கு வாங்கப் பட்டது. அது கப்பலில் கொண்டு செல்லப் பட்டு, சிட்னி துறைமுகத்தில் காட்சிக்கு வைக்கப்பட ஏற்பாடுகள் நடக்கின்றன. ஒரு பூரனின் விலை 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இன்னொரு பூரனை ஜேர்மனி வாங்கி தன் தொழில்நுட்ப அருங்கலைச் சாலையில் வைக்கவுள்ளது. இப்படியாக ரஷ்யாவின் விண்ஓடத்தின் முடிவு பரிதாபமாகி விட்டது. ஆனால் அமெரிக்க விண்ஓடங்களை விட, பாதுகாப்பானதாக பூரன் கட்டமைப்பு இருந்தது என்பதை நாஸாவே ஏற்றுக்கொண்டது.

பூரன் விண் பயணத்தின் ஏவு நிலையில்




**- த.அறிவன்**

நமது வீரர்கள்... யுவன்



# ஊரவர்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையே எனது வெற்றிக்கான உந்து சக்தி...!

உலகத்தில் அதிகளவு ரசிகர்களைக் கொண்ட விளையாட்டு உதைபந்தாட்டம். ரசிகர்களின் பேராதரவால் கட்டிக் காக்கப்பட்ட விளையாட்டு - இன்று அவர்களாலேயே குழப்பப்பட்டு வருகின்றமை மிக வேதனைக்குரிய விடயம். என்னதான் இருந்தாலும் வீரர்களையும், விளையாட்டையும் மதித்து விளையாடும்போதே வெற்றிபெறமுடியும். முழுமையான பயிற்சியுடன், விதிமுறைகளுக்கு அமைவாக அதே நேரம் வேகமாக மிக இலாவகமாகப் பந்தை பரிமாறி எம் நோக்கங்களை நிறைவு செய்யவேண்டும். இவ்வாறு குறிப்பிடுகின்றார் உதைபந்தாட்ட வீரர் வின்சிங்.

கடந்த பத்து வருடங்களாக தமது அணியான நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்துக்காக விளையாடி வரும் இவர், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அணியில் சில ஆண்டுகள் விளையாடி, பாடசாலை அணிக்கு வலுச்சேர்த்ததுடன், பாடசாலையின் பெருமையையும் நிலைநிறுத்தியவர். 26 வயதான ஞானசேகரம் - யேசுதாசன் வின்சிங் என்ற பெயரினாலேயே யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி, மன்னார், கொழும்பு ஆகிய இடங்களில் உதைபந்தாட்டத்துறை சார்ந்தவர்களால் அறியப்பட்டவர்.

குறுகிய காலத்தில் மிகத் திறமையான வீரராகத்தான் அடையாளம் காணப்பட்டமை தொடர்பாக வின்சிங் எம்முடன் பகிர்ந்தவை-

என்னுடன் அப்பா, அப்பாவின் சகோதரர்கள், எனது சகோதரர்கள் அனைவருக்கும் உதைபந்தாட்டத்துடன் நெருக்கமான இணைப்பு நீண்டகாலமாக இருந்ததுடன் இப்பவும் இருக்கிறது. ஜோன் மாஸ்ரர் மூலமாக பாடசாலை அணியில் இணைக்கப்பட்ட போதிலும் பவுண், எதிர், மணி, போன்ற மூத்த வீரர்களது ஆலோசனை, அறிவுரையால் 16 வயதில் சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்தில் விளையாடத் தொடங்கினேன். தொடர்ந்து இன்றுவரை விளையாடி வருகிறேன்.

எமது அணியிலுள்ள ஒவ்வொரு வீரரினதும் உழைப்புடனேயே என் பங்களிப்பு உள்ளது. இவர்களில்லாது எனக்கு வெற்றி இல்லை. என்மேல் எனக்கிருக்கும் நம்பிக்கையைவிட, எனது ஊரவர்கள் என்மேல் மரியாதையுடன், கூடிய நம்பிக்கையை வைத்துள்ளனர். கடந்த சில வருடங்களாக என்னை ஊக்கிவிக்கும் வகையில் பல்வேறுவகையான உதவிகளைச் செய்து வருகின்றனர் ஊர் மக்கள். இவர்களது அன்பும், ஆதரவுமே நான் தொடர்ந்து விளையாடுவதற்குக் காரணமாகிறது. எனது சகோதரர்களில் பவளசிங்கம், சவுதான், நீமான்ஸ்சன், சுதர்சன், அமல்ராஜ் ஆகியோர் நாச்சிக்குடா சென்மேரிஸில் விளையாடி வருகின்றனர். அஜந்தன் என்னுடன் விளையாடி வருகிறார். உதைபந்தாட்டத்தில் எனது குடும்பமே அர்ப்பண சிந்தையுடன் செயற்படுகின்றதென்பதைப் பெருமையுடன் இந்த இடத்தில் கூறுகிறேன்.


யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அண்மைக்காலமாக ஆரோக்கியமான போட்டிகள் இடம்பெறுவதில்லை. வீரர்களைப் பொறுத்தவரையில் திறமையாக விளையாடினாலும், சக வீரர்களை மதித்து, அவர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் விளையாடவேண்டும். இளவாலை யாழ். ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் அமைதியாக, நேர்த்தியான விளையாட்டுவதுடன் இந்தக் கழக வீரர் வினோஜன், நாவாந்துறை சென்நீக்கிலஸ் விளையாட்டுக்கழக வீரர் புறூஸ்லி போன்றவர்கள் மிகத் திறமையாக ஒரு பக்குவமான நிலையில் விளையாடி வருகின்றனர்.

பல போட்டிகளில் பரிசுகள், கேடயங்கள், வாழ்த்துக்களைப் பெற்றாலும் "ஆஜன்ரீனா அணிப் பயிற்றுனரால் வழங்கப்பட்ட நினைவுப் பரிசு" (கொழும்பில்) 2005 ஆண்டுக்கான எல்லைப்படை மாவீரர் உதைப்பந்தாட்டப்போட்டி. இதில் யாழ் பல்கலைக்கழக அணிக்கு கோல் அடிக்க முடியாதென்ற பலரது ஆதங்கத்தைத் தகர்த்தெறிந்து, எனக்குக் கிடைக்காத ஒரு பந்தை எதிர்பாராத விதமாகப் பெற்று அதனைக்கோலாக்கினேன். இவற்றை மறக்க முடியாதென மிக அமைதியாகக் கூறி தனக்கென உரிய பக்குவத்துடன் தன் கருத்துக்களை நிறைவு செய்தார் வின்சிங்.

ஆர்ப்பாட்டமில்லாது கலைநயத்துடன் பந்தை இலாவகமாக கையாண்டு நேர்த்தியாகத் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதில் பல நுட்பங்களைக் கையாண்டு, எதிரணிவீரர்களைச் சலிப்படைய, அதே நேரம் களைப்படையச்செய்வது இவருக்கு ஏதோ இன்பம் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம் பெறுகின்ற மைதானங்களில், வின்சிங்கின் ஆட்டத்தைப் பார்ப்பதுடன், பந்தை விசித்திரமான முறையில் தன் கட்டுப்பாட்டில் வைத்து உதைப்பது தொடர்பாக பார்வையாளர்கள் உரையாடுவதையும் அவதானிக்க முடிகிறது.

# ஆப்கானில் அதிகரித்துவரும் தாக்குதல்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை!

## ஐ.நா.பாதுகாப்புச்சபை தெரிவிப்பு



காபூல்

ஆப்கானில் அண்மைக்காலமாக தலிபான், அல் கொய்டா மற்றும் கிளர்ச்சிவாதிகளால் நடத்தப்படும் தாக்குதல்கள் அதிகரித்துள்ளமையை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென ஐ.நாவின் பாதுகாப்புச்சபை தெரிவித்துள்ளது.

ஆப்கான் அரசுக்கு ஆதரவாக செயற்படுபவர்களும், சர்வதேச படையினரும், கிளர்ச்சிவாதிகளின் இலக்காகவுள்ளதாக ஆப்கானுக்கான ஐ.நாவின் சிறப்புத்தூதுவர், பாதுகாப்புச் சபையில் தெரிவித்தார்.

கிளர்ச்சிவாதிகளால் நடத்தப்படும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை ஆப்கான் அரசு வகுக்கவேண்டுமென பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

ஆப்கானில் கிளர்ச்சிவாதிகள் அண்மைக்காலமாக உயிரிழப்பை ஏற்படுத்தும் வகையிலான பதுங்கித் தாக்குதல்கள் மற்றும் குண்டுத்தாக்குதல்களை நடத்திவருவதாக ஐ.நாவின் செயலாளர் நாயகம் கொபி அனானின் விசேட பிரதிநிதி ஜீன் ஆர்னல்ட் தெரிவித்தார்.

கிளர்ச்சிவாதிகளின் இலக்கு அரசஆதரவாளர்கள், சர்வதேசப் படையினர், தேர்தல் வேட்பாளர்கள், மற்றும் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளோர் எனவுள்ளதாகவும், இது அடுத்த மாதம் ஆப்கானில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு பெரும் இடையூறாக அமையலாமெனவும் அவர் தெரிவித்தார்.

ஆப்கானில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான பாதுகாப்பை வழங்குவதற்கு ஆயிரக்கணக்கான அமெரிக்க மற்றும் நேட்டோ படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கான பாதுகாப்பில் ஆப்கான் படையினரும், பொலிஸாரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஆப்



கான் தேர்தலில் 2,800 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

ஆப்கானில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள தேர்தலை வரவேற்பதாக ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜோன் போல்டன் தெரிவித்துள்ளார்.

ஆப்கான் அரசிற்கு, ஐரோப்பிய யூனியன் தனது ஆதரவை தொடர்ந்து வழங்குமெனவும், அங்கு நடைபெறவுள்ள தேர்தல் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான மேலும் ஒரு படியெனவும், ஐ.நாவுக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன்ஸ் பாரி பாதுகாப்புச் சபையில் தெரிவித்தார்.

ஆப்கான் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன், ஆப்கான் அரசுடனும், சர்வதேச சமூகத்துடனும், எதிர்காலத்தில் ஆப்கானில் ஐ.நாவின் நிலைப்பாடு தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக ஐ.நா பொதுச்செயலாளர் கொபி அனான் தெரிவித்தார்.

# இந்திய கடற்படை ஹெலி விபத்து; 4 நாட்களின் பின் ஒருவர் உயிருடன் மீட்பு

பெங்களூர்

கர்நாடகம் - பெல்காம் மாவட்டத்தில் ஷிரோலி பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று விழுந்து நொருங்கியது. கோவாவிலிருந்து விசாகப்பட்டினம் சென்று கொண்டிந்த இந்த ஹெலிகொப் டரில் 6 பேர் பயணம் செய்தனர்.

